திராவிடநாடு

24—6—62 | வார வெளியீடு

தடையென்ன செய்துவிடும்?

[செ. கி. செயராமன்]

இருள்போக்கும் மனமுடையோன் எழுந்து விட்டான்;
ஏற்றமுடன் செயலாற்றத் தொடங்கி விட்டான்
இருள்தேக்கி வாழ்ந்தவர்கள் இனிமேல் இங்கே
இடுகாட்டில் தீமனதைப் பொசுக்கி விட்டு
பெருமைசால் திருவிடத்தான் பின்னே நின்று,
'பிறக்காதோ விடுதலையோர் நாளில்' என்பர்!
பொருள் பொதிந்த கொள்கையினைத் தூற்றுவோரும்
புகழ்ந்துரைத்துப் பாடுகின்ற நிலையும் ஓர்நாள்

திடமாக வருமென்று திண்மையாளன்,
தூற்றுவோர்க் கஞ்சாத தூய வீரன்,
கடமையைச் செயலாற்றத் துணிந்த போதில்
கடுகளவும் நிலையழிய மாட்டான்; எந்தத்
தடைவந்த போதிலும் தயங்கான்; எங்கள்
திருவிடத்தின் பெருமையினை உயரச் செய்து
அடிமைநிலை அழித்திடுவான்; கொள்கைக்காக
உயிரையே கொடுத்திடவும் அஞ்ச மாட்டான்!

அல்லல்பல கூட்டிவிட்டால் கழக மிங்கே
அழிந்தொழிந்து வீழுமென எண்ணு வோர்கள்
எல்லையிலா இழிசெயல்கள் புரிந்த போதும்,
இடர்கள் பல ஏற்பட்ட போதும்
வெல்வதன்றித் தோல்விகாணு மறவன், இங்கே
வெற்றிகொள்வான்; அடிமைநிலை அழிந்து போகும்;
கொல்லவரும் தடையெல்லாம் தூள்பட் டோடும்;
தவறாது விடுதலையோர் நாளில் காண்பான்!

எப்படித்தான் படைத்தான்!

ந. இறைவன், பி. ஏ.,

தலைவி! தங்களை எடுத்து உண்பவன்போல் பார்த்துவிட்டுச் செல்கிறானே! என்ன சொன்னான் தலைவி! சொல்லமாட்டாயா? என்னிடம் சொல்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?

என்னடி நடந்துவிடும்?

என்ன நடந்துவிடுமா? நாளை காலை விடிவதற்குள் ஊரும் உலகமும் உன்னையும் அவனையும் சேர்த்துச் சேர்த்துப் பேசச் செய்துவிடுவேன்.

நீதாண்டி உண்மைத் தோழி! போ போ! போய் அதைச் செய் முதலில். அவர் சார்பிலும் என் சார்பிலும் உனக்கு என் நன்றி.

அதுபோகட்டும் தலைவி! நீருள்ளே இருக்கும் உங்கள் காலழகைப் பாருங்கள். தங்கக் கட்டியா? தாமரை மொட்டா? என்று கெண்டைகள்கூட மயங்குகின்றன. இதைக்கண்டுதானோ, தங்களை வாரி உண்பவன்போல் பார்த்திருந்தான் அவன். ஆமாம், இதென்ன தலைவி காயம். புலியென்று உன்மேல் பாய்ந்தானோ பாவி? பல்லைப் பதித்தானோ? இல்லை, நகத்தால் வரைந்தானோ? சொல்லம்மா உடனே.

இந்த நீருக்குத்தான் எவ்வளவு ஆசை பாருங்கள் தலைவி. அவன் பதித்த காயத்தில் நின்று மின்னுகிறதே. அவன் இங்கிருந்து இந்தத் துளிநீரில் தன் முகவழகைக் காட்டி நின்றால்......உங்கள் நெஞ்சத்தில் தேன் ஊறும் இல்லையா தலைவி! என்னம்மா நான் தேன் ஊறும் என்றதும் நாக்கைச் சுவைக்கிறீர்கள். தேனென இனிக்கிறதா அவனைப் பற்றிப் பேசினால்!

போடி போ! வேறென்ன? தேனாக இனிக்காமல், வேம்பாகவா கசக்கும்.

இனிக்கும்! இனிக்கும்!! இந்தளவுக்குப் போயாச்சா? இனிப் பயமுறுத்திப்பயனில்லை. நயந்தால்தான் நயம் கிடைக்கும். என்னென்னவோ பேசினான் போலிருக்கிறதே நெடுநேரம். கொஞ்சம்சொல்லுங்களேன், அதைக் கேட்டு நானும் பயனடைகிறேன். சொல்லேன் தலைவி......!

சொல்லவா தோழி!

சொல்லுங்கள் தலைவி!

தென்னந் தோப்பிலிருந்து மதுக்குடத்தைத் தூக்கிக்கொண்டு வந்தானா? வரும் வழியில் வழிமேல் விழி பதித்துக் காத்திருந்தானா? நான் அருகில் வந்ததும் என்னை எடுத்து உண்பவன்போல் பார்த்திருந்தானா? நான் அவனைக் காணாதாள்போல் நடந்தேனா? என்னை நில்லெனச் சொல்லி நிழலெனத்தொடர்ந்தானா? தொடர்ந்தானா?

தொடர்ந்தான்! தொடர்ந்தான்.... தொடர்ந்து......என்ன செய்தான் என்பதைச் சொல்லுங்கள்.

என் நடையையே பார்த்திருந்தானா? நெஞ்சில் துணிவு வந்தவன்போல் பாய்ந்து வந்தானா? பாய்ந்தவன் துணிவிழந்தவன்போல் பயந்து நின்றானா? நின்று......

'சொன்னதைச் சொல்லேன் தலைவி!'

என் இடையைத் துடியிடை என்றான். பின்னர், மாற்றிப் பிடி இடை என்றும் சொன்னான்.

'பிடித்தானா வந்து!'

போடி குறும்புகாரி! பிடிப்பானா வந்து!

கொடியிடை என்றான்! மீண்டும், இல்லை இல்லை! ஒடியிடை என்றான் மாற்றி.

ஓடிவந்து ஒண்டொடி நின் இடையை ஒடித்தானா? இல்லை, ஒடியாமல் காத்தானா நின்று!

ஒடிப்பானா அவன். மெள்ள வந்து என்னிடையைத் துவளிடை என்றான். கொடிபோல் துவண்டவன் நின்றான்.

துவண்டவன் உங்கள்மேல் விழுந்து உங்களைத் துகிலென அள்ளினானா? இல்லை மெள்ளக் கிள்ளினானா?

கள்ளி! நான் சொல்லவா? இல்லை சொல்லாமல் செல்லவா?

இல்லை! இல்லை!! சொல்லுங்கள்! சொல்லுங்கள்

காதின்மேல் காதல் கொண்டோ கண்கள் காதளவோடின என்று கேட்டான். கடைக்கண்ணால் என்னை நோக்கி நோக்கித்தான் கண்கள் நீண்டனவோ காதளவு என்றும் கேட்டான்.

மலரென்பான் என் முகத்தை. மாற்றி, பின் மதியென்றே சொல்வான் அஃதை. வான் பார்ப்பான்; வான் மின்னும் மீன் பார்ப்பான்; வானத்து மதியையும் பார்ப்பான். மதியிதுவா அதுவா என்பான் என் முகங்காட்டி! தேனென்பான் என் முகத்தை. தேவையெனச் சொல்லாமல் பார்ப்பான் என்னை.

வாளனையபுருவத்தையும்,வேலனைய கண்ணிணையும் ஏன் படைத்தான் எனக் கேட்பான். எனக்கென்ன தெரியுமென்பேன். தெரிந்துவை என்றான். என்னைத்தவிர எவனொருவன் நெஞ்சத்தால் நின்னை நினைத்தாலும், அன்றி வஞ்சத்தால் பார்த்தாலும், அவனைப் பஞ்சு பஞ்சாக்குதற்கே உன் முகத்தில் கொலை வாளன்ன புருவமும், கொடு வேலன்ன கண்களையும் படைத்தான், எனப்படைத்தான் புதுக்கவிதை எனை வைத்து.

வான் சிந்தும் நீர் சிந்தி வளர்த்தேனே கொடிகள். அவைகள் தேன் சிந்தும் மலர்சிந்தி அழைத்தனவா என்னை. தேன் சிந்தும் மலர்கள் மணம் சிந்திக்கிடந்தனவா அங்கே. மலரெடுத்துக் குழல் முடிய அடியெடுத்து நடைநடந்து, எழில் சிந்தும் சிலம்பு இசை சிந்தச் சென்றேனா நான்.........

அப்பொழுது, பண்ணெடுத்து இசையெடுத்துப்பாடிற்றுஒருசிலம்பு, நான் பாட வேண்டாவோ எனப் புலம்பி ஊடிற்று மறுசிலம்பு. இதைக் கேட்டுக்குழலெடுத்துயாழெடுத்துப்

(4-ம் பக்கம் பார்க்க)

வளரவிடுக பொதுநோக்கை!

[மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (24—6—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 43

"பிரிவினைக் கொள்கைகளைக் கொண்டவர்கள் அரசு நிருவாகத்தில் நுழைந்துவிடுவதைத் தடுப்பதற்காகவே, அரசு வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், அவர்களைப்பற்றிய விவரங்கள் விசாரித்தறியப்படுகின்றன" என்று அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தமிழ்நாடு அரசிதழ் பதிவுபெறு அலுவலர்கள் சங்கத்தின் 40-வது மாநாட்டைத் தொடக்கிவைத்துப் பேசியபோது குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் அவர்களின் கூற்றுப்படி 'இந்த நாட்டின் அரசு நிருவாகத்தில் எந்த அரசியல்கட்சி வேண்டுமானாலும் நுழைந்துகொள்ள அனுமதிப்போம். ஆனால், பிரிவினைவாதம் புரிவோர், அரசு நிருவாகத்தின் அருகிலேகூட வரவிடமாட்டோம்' என்பதே பெறப்படுகிறது. அதாவது இந்நாட்டின் அன்றாட அரசு நிருவாகத்தில் மற்றெல்லாக் கட்சிகளுக்கும் தாராளமாக இடமுண்டு. குறிப்பாகக் காங்கிரசுக்காரர்களும், அவர்களுக்காகப் பந்தந்தூக்கிக்கொண்டு பின் செல்வதையே தங்கள் கட்சிக் கோட்பாடாக வைத்துக்கொண்டிருக்கும் ஏனைய கட்சியினரும் அரசு நிருவாகத்தில் நுழைந்துகொள்வதற்குத் தாராளமாக அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், பிரிவினைக்கொள்கையைக் கொண்டவர்கள் மட்டும் அரசு நிருவாகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அமைச்சர் இந்தக் கருத்தை வெறும் அறிவுறுத்தலாகக் கூறவில்லை. பெரியதொரு அச்சுறுத்தலாகவே எடுத்துத் தொடுத்துவிட்டிருக்கிறார். அதன் மூலம் எந்தச் சார்பும் இல்லாமல் இயங்கவேண்டிய பொது ஊழியர்களிடையே ஒரு கலக்கத்தையும், குழப்பத்தையும், அச்சத்தையும் உண்டாக்கியிருக்கிறார்.

"எந்த அரசியல் சார்புள்ளோரும் அரசு நிருவாகத்தில் நுழைந்துகொள்வதைத் தடுப்பதற்காகவே, ஆட்களைத் தேர்ந்தெடுக்குமுன் அவர்களைப்பற்றி விசாரித்து அறியப்படுகின்றது" என்று அமைச்சர் அவர்கள் கூறியிருந்தால், அதில் நல்லெண்ணம் இருந்திருக்கும். பரந்த நோக்கைக் கண்டிருக்கலாம். பொதுமக்கள்—பொதுநலனில் அக்கறையுள்ளோர் கலக்கத்துக்கும், குழப்பத்துக்கும் உள்ளாக நேர்ந்திராது.

ஆனால், அமைச்சர் அவர்களோ பொதுநோக்கை மறந்து, தம் உள்ளக் காழ்ப்புக்கேற்ப அச்சுறுத்தலைக் காட்டியிருக்கிறார்.

அது ஒருபுறமிருக்க, யாரை, எவ்வாறு பிரிவினைவாதிகள் என்று கணித்து இவர்கள் அரசு நிருவாகத்தில் நுழைந்துகொள்வதிலிருந்து தடுக்கப்போகிறார்கள்? தமக்கு வேண்டாதவர்கள் யாரை வேண்டுமானாலும் பிரிவினைவாதிகள் என்று கூறி இவர்கள் தடுத்துவிடலாம். வேண்டியவர்கள் யாரை வேண்டுமானாலும் பிரிவினைவாதிகள் அல்லர் என்று சலுகை தந்துவிடலாம்.

இனித், தென்னகத்தின் வளத்தையும், வாழ்வையும், நலத்தையுமே முழுமுதற் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வரும் பேரியக்கத்தைச் சார்ந்தோர் நாம். இந்த நாட்டின் நலிவையும், அந்த நலிவுக்கான காரணத்தையும், அந்த நலிவு போக்கப்படவேண்டிய இன்றியமையாமையையும் நாட்டு மக்களிடத்திலே நாள் தோறும் உலகறியச் சொல்லிக்கொண்டு வருகிறோம். அந்த நலிவினை ஓட்டுதற்கான வழியினையும், வகையினையும் அன்பாற்றில் சென்று, அறத்தாற்றில் நின்று, நேர்மையின் பாற்பட்டு, நியாயத்தின் வழி கண்டு எடுத்துச் சொல்லத் தவறியதில்லை நாம். தவறமாட்டோம்! நம் நேர்மையும், உண்மையும் மக்களை நம்பால் கவர்ந்திழுக்கின்றன.

விடுதலை வேட்கை கொண்ட நாம், நாட்டின் நலத்திலும், வளத்திலுமன்றி வேறெதனிலும் அக்கறை காட்டாத நாம் பிரிவினைவாதிகள் என்று குறிப்பிடப்பட்டு, அந்தப் பிரிவினை ஏதோ பேரச்சம் விளைக்கக்கூடிய ஒன்று என வருணிக்கப்பட்டுத் தாழ்வாகப் பேசப்படுகிறோம்.

அவ்வழியில் சென்றே அமைச்சர் அவர்கள் 'அரசு நிருவாகத்தில் பிரிவினைவாதிகள் நுழைந்துவிடாமல் பார்த்துக்கொள்வோம் என்று ஒரு சார்பில் நின்று அச்சுறுத்தியிருக்கிறார்.

இந்த முறையை எந்த நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டாலும் மக்களாட்சிப் பண்புக்கு ஒவ்வாத முறை! தகாத முறை!

ஆங்கிலேயன் காலத்தில் சிறிய ஒப்பந்த வேலைகள் பெறுகின்றவர்களிடமிருந்துகூட "என் வீட்டில் காந்திபடம், நேருபடம் வைத்திருக்கமாட்டேன். எந்தக் காங்கிரஸ்காரரோடும் நட்புக்கொள்ளமாட்டேன். எந்தக் காங்கிரஸ்காரரையும் என் திண்ணையில்கூடச் சேர்க்கமாட்டேன்" என்றெல்லாம் எழுதி வாங்கிக்கொண்டுதான் அலுவல் தந்தார்கள். அந்த ஆங்கிலேயன் வழி நின்றுதான் இன்று அமைச்சர் அவர்கள் அச்சுறுத்துகின்றார். அந்த ஆங்கிலேயன் அந்நாள் காங்கிரஸ்காரர்களைத் தேசியவாதிகள் என்று ஒப்புக்கொள்ளவில்லை. (Traitors) தேசத் துரோகிகள் என்றுதான் கூறினான். அதை அமைச்சர் அவர்கள் மறந்திருக்கலாம். நாட்டு மக்கள் மறக்கவில்லை என்பதை மனத்திற்கொண்டு, வளரவிடுக பொதுநோக்கை! மலரவிடுக மக்களாட்சிப் பண்பை என்று கேட்டுக்கொள்கிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

பாடுவோரிடம்கூடக் குறையெடுத்துக் காட்டுவார் உலகோர் என் இசையெடுத்துப் பாடினால் நான்" என்று தன்புகழைத்தானே தன் வாய்மணக்கத், தேன்கமழும்மழலைத் தமிழ் மணக்கப் பேசும் குழலியோ இதுவுமெனக் குழைந்தனவா என் மேகலைகள்.

இவைகேட்டு, அமைதிக்கு உலை வைக்கும் அழகியே! நீ ஆடாமல் அசையாமல் நின்றால்போதும் என்று என்னடியில் வீழ்வான்போல் இறைஞ்சி நின்றான் அவன்.

இவனென்ன சொல்லுவது, நாமென்ன நிற்பது என எண்ணி மெள்ளநடந்தேன், மேகலையும் சிலம்பும் பாடி மென்னிசையைச் சிந்த! சிந்த!!

ஓடிவந்தான். தலையிருந்த குடமதனை இறக்கிவைத்தான்.

எழிலே இது என்னவென்றான் மதுவின் குடம் காட்டி.

மது என்றேன் நான். எது என்றான் அவன். மதுவின் குடம்காட்டி இது என்றேன் நான். அது இல்லை, இது என்றான் தலைநிமிர்ந்தான். புரியாமல் மீண்டும் எது என்றேன் நான்.

தென்னையையும் பார்த்தான். பார்த்தவன் பின் என்னையும் பார்த்தான். தெங்கின் செங்காய்களையும் பார்த்தான். தெரியாதான்போல் பின்னர்......

ஐயயோ இது என்ன தலைவி நாணம். நானும்பெண். நீயும் பெண். நம்மைச்சுற்றிலும் மரமும் கொடியும்; பறவையும் பாழ்வெளியும்; காவில் மானும், நீரில் மீனும்...இதற்கேன் நாணம். இம்...இம்...சொல்லுங்கள் பிறகு!

போடி போ! நாணத்தால் தலை குனிந்தேன் நான். புரிகிறதா என்றான் அவன்.

எது என்றேன் நான்.

'மது எது' என்றானவன்.

புரியவில்லையே என்றேன் நான்.

இன்னுமா புரியவில்லை; கேள் என்றான். "சொன்னான், நான் உன் எழிலை உண்டபோது நாணம் உன் உடலைத் தின்றதா? அப்போது தலை தாழ்த்தித் தாள்பார்த்துத் தரைகீறப் பார்த்தாயே! தாள்பார்க்க முடிந்ததா உன்னால்! முடியவில்லையே, ஏன். அப்போது தாள்பார்க்க எண்ணித், தாள்பார்க்க இயலாமல் கண்களைத் தடுத்து; தனைப்பார்க்கச் செய்ததே அதுதான் மது என்றான் பாவி.

எது! எது! கொஞ்சம் சொல்லுங்கள் தலைவி.

தாள்பார்க்க எண்ணிய என் கண்களைத் தடுத்துத் தன்னைப் பார்க்கச் செய்ததே அதுதான் மது என்றான்.

குறும்புக்காரனுடன் நமக்கேன் பேச்சென்று எண்ணி வழிவிடு என்று நடந்தேன். மது கொஞ்சம் கொடு என்று தொடர்ந்தான் பின்னால். குடமெடுத்துக் குடியென்று நின்றேன் கொஞ்சம். இல்லை! நீயெடுத்துக்கொடு என்று கேட்டான் நின்று. முடியாது என முனகி நின்றேன் நான், ஊடலைத் தீர்ப்பான் போல் உண்ணவா? என்றான் மெள்ள. உண்ணேன்! என்றேன் உளமிலாள் போல் நடித்து. குடமெடுத்துக் கள்ளை உண்ணாமல் எனை எடுத்து உண்டான் காளை தன் கண்களால். உண்டுவிட்டுக் கொடு குடத்தை என்றேன் நாணி. உண்டுதான் பார்க்கின்றேன்...உண்டால் முடிகிறதுவா உன்னழகு என்றான் கள்வன். பேசிப் பயனில்லை இந்தக் கள்வனுடன் என எண்ணி மதுக்குடத்தை இடையேற்றி மெள்ள நடந்தேன் நான்.

கொள்ளியை அள்ளி அணைத்தவன்போல் துள்ளி வந்து என்முன் நின்று, குடத்தை இறக்கிவைத்துக் கொன்றிடுவான்போல் பார்த்தான் என்னை.

ஏன் இறக்கி வைத்தாய் இடையிருந்த குடமதனை என்றேன் நான்!

ஏன்? எனக் கேட்டுச் சினந்து, பின் சொன்னான்.

இல்லையெனச் சொல்லும்படி இழையாகிப்போன இடையதனில் நீ குடம் வைத்து நடை நடந்தாய். இல்லையெனச் சொல்லும்படி இழையாகி உள்ள நான் இனிமேல் நில்லேன்! நில்லேன்!! என்றழுது பாரமுடைய மதுக்குடத்தைத் தாளேன்! தாளேன் எனப் புலம்பி! ஓடிடுவேன்! ஓடிடுவேன்!! என ஓலமிட்டு! பாடிவந்த மேகலையும், பண்ணமைத்த எழில் சிலம்பும்!! 'இடை'யிற்று விழுமானால் 'இருப்'பேது நமக்கென்று அழுது புலம்பி அபயம்! அபயம்!! என் வேண்டி! பார்த்திருந்த எனையழைத்துக் 'கோபோல நிற்பவனே! நீ வந்து கோதுபடா கோதை இடை காவேன்! காவேன்! என வேண்ட! நானோடி வந்து குடம் இறக்கி வைத்து உபயம்! உபயம்!! எனக் காத்தேன்!" எனச் சொன்னான்.

சொன்னவன், நின்றான் நெடுமரம் போல். நின்றவன்மேல் நெடுங்கொடிபோல் வீழ்ந்தேனா? படர்ந்தேனா பசலையாகி! சற்றுப்பின் விழித்து, நெடுமூச்செறிந்து என் தோளினைப் பார்த்தேன். அவன் நகக் குறி அங்கே பதிந்திருந்தது. அதுதாண்டி நீ முன்னாலே கேட்டாயே என்னம்மா காயமென்று! அதுதான். அந்தக் காயத்தை கழுவுவான்போல் நீரினை அள்ளித் தெளித்தான். அந்தக் காயத்தில் ஒரு சொட்டு நீர் நின்றது. அதில் அவன் முகம் கண்டு மகிழ்ந்திருந்தேன். அப்போதுதான் எங்கிருந்தோ நீ வந்தாய்! தொங்கிய முகத்தோடு உனைத் தூற்றி அவன் சென்றான் எனைவிட்டு" என்றாள் தலைவி.

இதோ அவர்கள் இருவரும் சோலையிலே நடக்கின்றனர்.

கொஞ்சம் நிற்கச் சொல்லுங்கள் எழில் காண என வேண்டும் என்னற்றோருக்கு. இன்பத்திற்கு ஏன் எல்லை என்ற வினா எழுப்பி, எல்லையென ஒன்று இருப்பினும், நான் அந்த எல்லையைக் கடந்து செல்வேன் என முழங்கி, இருக்கும் இன்பம் அத்தனையும் என் படைப்பில் படைப்பேன் என்றார்த்து; அந்தப் படைப்பால் அகிலத்து அருங்கவிகளை வெல்வேன் வெல்வேன் என்று சூளுரைத்து; அந்த வெற்றியின் விருதாக என் பெயரை "ஜெயங்கொண்டான்" எனச் சொல்வேன் என்றானே ஒரு கவிஞன், அவன் படைத்த அழகோவியத்தின் நிழலோடுதான் நீங்கள் இதுவரைக்கும் சொல்லாடிச் சுவை பெற்றீர்கள்.

இதோ அவளே வருகின்றாள். அணுகுங்கள் சுவை கிடைக்கும்!

"உபய தனம் அசையில் ஒடியும்
இடை நடையை

ஒழியும் ஒழியும்' என; ஒண்சிலம்பு

'அபயம் அபயம்' என அலற; நடை
பயினும்

அரிவைமீர்! கடைகள் திறமினோ!"

காஞ்சீபுரம்

24-6-'62

தம்பி!

எல்லோரும் ஓர் இனம்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
கூடிவாழ்ந்தால் கோடி இன்பம்
வேற்றுமையில் ஒற்றுமை
பாரத சமுதாயம்
இமய முதல் குமரி வரை

சுவைமிக்க சொற்றொடர்கள் இவை என்பதனைப் பலரும் கூறக் கேட்டிருக்கிறோம். கேட்கும்போதே தித்திப்புக் காண்பர், நினைக்கும்போதே சொக்கிப்போவர் என்ற நம்பிக்கையுடனேயே இந்தச் சொற்றொடர்களைக் கூறுகின்றனர். நான் இவைகளைச் சொற்றொடர்கள் என்று கூறுகிறேன் —இவைகளைப் பேசுவோர் அவ்விதம் கூறுவதைக்கூடக் கண்டிப்பார்கள். "ஏ! அறிவிலி! இவை சொற்றொடர்களா? வெறும் பதங்களின் கூட்டா? எழுத்துகளின் கோர்வையா? கேவலம் ஓசையா? அல்ல! அல்ல! இவை இலட்சியங்கள்! மறுக்கொணாத உண்மைகள்! மாண்பளிக்கும் தத்துவங்கள்! வாழவைக்கும் வழிவகை! கருத்துக் கருவூலம்! இழக்கொணாத செல்வம்! ஏற்புடைய கொள்கை!! நாட்டுப்பற்றுமிக்கோர் அளித்துள்ள பேரொளி! வெறும் வார்த்தைகள் அல்ல" என்று கோபம் கொந்தளிக்கும் நிலையில் செப்புகின்றனர்—அறைகின்றனர்! நம்பிக்கை, எழுச்சி, ஆர்வம் ஆகியவைமட்டும் அல்ல, அது மறுக்கப்பட்டுவிட்டால் என்னென்ன கேடுகள், ஆபத்துகள் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவர்களை அவ்விதம் பேசச் செய்கிறது. மலடி வயிற்று மகன்போலே, ஒரு புதையல் எடுத்த தனம் போலே, அவர்கள் 'ஏக இந்தியா' 'பாரத சமுதாயம்' எனும் எண்ணத்தைக் கருதுகிறார்கள். எனவேதான், அந்த எண்ணம்பற்றித் தயக்கம் காட்டினால், ஐயப்பாடு கூறினால், மறுப்பு உரைத்தால் அவர்களுக்கு அடக்கமுடியாத ஆத்திரம் பிறக்கிறது; ஆர்ப்பரிப்புத் தன்னாலே கிளம்பிவிடுகிறது. மேலும், இந்த எண்ணம் ஏற்பாடு ஆகவிடமாட்டேன், ஏனெனில் அது எம்மைப் பொறுத்தவரையில் 'ஆகாவழி' என்று துணிந்து கூறித், தொடர்ந்து வலியுறுத்தி, பேராதரவு திரட்டி, பெருங்கிளர்ச்சி நடாத்தி, ஜனு ஜின்னா முன்பு வெற்றிபெற்று 'பாகிஸ்தான்' அமைத்துக்கொண்டார் அல்லவா? அந்த நினைவு வேறு வருகிறது, உடனே உள்ளம் உலைக்கூடமாகிறது, கனல் கக்குகிறார்கள்.

சுவைமிக்க எண்ணத்தையும், அதன்படி அமையும் ஏற்பாட்டினையும் மேற்கொண்டு, அனைவரும் மகிழ்ந்திடச் செய்து பாராட்டுதலைப் பெறுவதை விட்டுவிட்டுச்,

சூடும் சுவையும்

[5]

சுடுசொற்களால் அந்தச் சுவைமிகு இலட்சியத்தை மறுத்துப் பேசி, மற்றவர்களின் கோபத்தைக் கிளறிப், பகையை எழுப்பிவிடுவது எற்றுக்கு? நாமும் நாலு பேருடன் சேர்ந்து, ஏகஇந்தியா, இமய முதல் குமரி வரை, பாரத சமுதாயம், என்று கூறிவிடலாமே, எதற்காக வீணாக விரோதச் சூழ்நிலையை உருவாக்குவது என்றுதான், எவருக்கும் முதலில் தோன்றும். இங்கு மட்டும் அல்ல, எங்கும். இப்போதுமட்டுமல்ல, எப்போதும். ஏனெனில், சுவைமிக்க கருத்துகளிலே நாட்டம் செல்வதும், சிக்கலற்ற நிலையை விரும்புவதும், உள்ளதைக்கொண்டு திருப்தி அடைவதும், கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளத் துணிவற்றவர்கள் அனைவருக்கும் உள்ள இயல்பு.

வாயிற் போட்டதும், கருப்புத் துண்டு கற்கண்டு ஆகிவிடக் கூடாதா, மென்று, குதப்பிச் சாறு எடுக்கவேண்டி இருக்கிறதே, எத்துணை சிரமமான வேலை என்று எண்ணுபவர்கள், இந்த வகையினர்.

பருத்தியாகக் காய்ப்பதற்குப் பதிலாகத் துணியாகவே கரத்துக்கு எட்டும் தூரத்தில் காய்த்திருக்கக்கூடாதா, என்று நினைப்பவர்கள் இவ்வகையினர்.

ஆனால், எந்த விலையுயர்ந்த பொருளும் அவ்வளவு எளிதில் கிடைத்துவிடுவதில்லை—வெட்டி எடுத்தாகவேண்டும் தங்கத்தை—மூழ்கி எடுத்தாகவேண்டும் முத்துக் குவியலை—அரைத்து எடுத்தாகவேண்டும் நறுமணமிக்க சந்தனத்தை—உழுது விதைத்து நீர்பாய்ச்சிக் களை எடுத்து அறுத்து எடுத்தாகவேண்டும் செந்நெல்லை.

உரிய, உயர்ந்த, பயன்மிகு கருத்துகளைப் பெறுவது, இவைகளைவிடக் கடினமான செயல்.

உரிமை உணர்ச்சி பெறுவதும், உரிமைக்காகக் கிளர்ச்சி நடாத்துவதும், வெற்றி பெறுவதும் மிகக் கடினமான வேலை. பலருக்கு அதனால்தான், அப்படிப்பட்ட வேலைகளிலே ஈடுபட மனமும் துணிவும் வருவதில்லை; எனவே அவர்கள் உள்ளதைக்கொண்டு திருப்தி அடைய முயலுகிறார்கள், கைக்கு எட்டும் ஏதேனும் ஓர் சுவைமிகு கருத்தினை மேற்கொண்டுவிடுகின்றனர். சுவைமிகு கருத்தெனக் கொண்டது பிறிதோர் நாள் கசப்பளிப்பினும், பயன் தருவதாக இல்லாது காணப்படினும், வேறோர் கருத்தைத் தேடிப் பெறுவதைக் காட்டிலும், உள்ளது உவர்ப்பு எனினும், அதுவும் ஓர் சுவையே என்று கருதிக்கொள்ளத் தலைப்படுகின்றனர். இம்முறையிலேதான் இன்று பலரும், ஏக இந்தியா, பாரத சமுதாயம், இமய முதல் குமரி வரை என்பவைகளைப்பற்றிக்கொண்டு இருக்கிறார்களேயன்றி, முழுத் திருப்தியுடன் அல்ல, மனதார நம்பியும் அல்ல.

இது போதும்.
இதுதான் உள்ளது.
இதைவிட வேறு ஏது?
வேறு தேடிட முடியுமா?
இதைவிடப் பயனுடையது பெறுவது கடினம்.
கடினமாகப் பாடுபட முடியுமா?
முடிந்திடினும் வெற்றி கிட்டும் என்பது என்ன உறுதி?

எனும் இவ்விதமான உரையாடல் நிரம்ப; ஏக இந்தியா எனும் ஏற்பாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளவர்களிடையே, நடைபெற்றவண்ணம் இருக்கிறது.

பூரிப்புடன், பெருமிதத்துடன், நம்பிக்கையுடன், இந்த இலட்சியத்தை அவர்கள் மேற்கொண்டில்லை.

என்ன செய்யலாம், இவ்வளவுதான்! — என்ற மனக்குறையுடன்தான் உள்ளனர்.

பொருளற்று, முழுச்சுவையற்று, தக்க பயனற்று உளதே 'ஏகஇந்தியா' எனும் ஏற்பாடு என்று ஓரோர் வேளை தோன்றிடும்போதும், விளக்கில்லாவிடத்து விண்மீன் ஒளியின் துணைகொண்டு நடத்தல் போலவும், குளிர் நீக்கப் போர்வையில்லாதபோது கையதுகொண்டு மெய்யது போர்த்துக்கொள்ளல் போலவும், சுவையும் பயனும் மிக்கதான வேறோர் ஏற்பாட்டினைத் தேடிப்பெறும் துணிவு இல்லாதபோது, உள்ளது போதும் என்று திருப்தியை வரவழைத்துக் கொள்கின்றனர். மனவறட்சி வெளியே தெரிந்துவிடுமோ என்ற வெட்க உணர்ச்சியால் அலைக்கழிக்கப்பட்ட நிலையில், சுவையிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு விடுகின்றனர். இல்லையெனில், தம்பி! அடிக்கடி 'ஏகஇந்தியாவில்,' எனக்கா உனக்கா? என்னுடையது உன்னுடையது? என் இயல்பு தெரியுமா, உன் வரலாறு தெரியாதா? என்னை வாடவிட்டு உனக்கு வாழ்வா, நீ வாழ நான் வதைபடுவதா? என் மக்களுக்கு வேலையில்லை, உனக்கு இங்கு விருந்தா?—என்பன போன்ற பேச்சுகளும், கோபதாபங்களும், கொந்தளிப்புகளும், கிளர்ச்சிகளும், வெடித்துக் கொண்டு கிளம்புமா? எண்ணிப் பார்க்கச் சொல்லு, ஏகஇந்தியா பேசுவோர்களை. நான் இதனைக் கேட்டேன், தில்லியில், பேசும் வாய்ப்புக் கிட்டியபோது,

பம்பாய் எமக்கு என்று மராட்டியர் கிளர்ச்சி நடாத்தியபோது, ஏகஇந்தியா எனும் இலட்சியத்தை அந்த அளவிலே மராட்டியர் மறுத்திடவில்லையா?

குஜராத் மாநில அமைப்புக்காக குஜராத்தியர் குமுறி எழுந்தனரே, அந்த அளவிலே அவர்கள் ஏகஇந்தியா எனும் ஏற்பாட்டை எதிர்த்தனர் என்று பொருளல்லவா?

இவ்விதம் நான் கேட்டது, கொதிப்பை உண்டாக்கியதை நான் உணருகிறேன். ஆனால் கேட்போர் மனம் குளிரப்பேச, கதாகாலட்சேபம் நடத்தவேண்டுமே, அதற்கா நான்?

கூடி வாழ்வோம் என்று சொன்னாலே, வடக்கே உள்ளவர்களின் மனம் எவ்வளவு குளிருகிறது என்பதையும் நான் பார்த்தேன். என் பேச்சிலே ஒரு கட்டத்தின்போது,

> உங்கள் அனைவருடனும் ஒன்றுபட்டு வாழ
> வேண்டும் என்று விரும்பத் தோன்றுகிறது

என்று நான் குறிப்பிட்டேன் — கேட்டுக்கொண்டிருந்தவர்களின் முகம் மலர்ந்தது, ஆர்வம் காட்டினர். ஆனால் நான் கூறிய அடுத்த கருத்து அவர்களின் களிப்பினைக் கருக்கிவிட்டது.

> விருப்பம் என்பது ஒன்று; இருக்கும்
> உண்மை நிலைமையோ முற்றிலும் வேறானது.

என்று நான் கூறினதும், செச்சே இவன் பாரதம் பேசவில்லை, திராவிடம் கேட்கிறான் என்று அவர்களுக்குப் புரிந்தது, களிப்பு உவர்த்தது.

தம்பி! நாம் திராவிடம் கேட்கிறோம், பாரதம் எனும் ஏற்பாடு, சுவையும் பயனும் தாராது என்ற நம்பிக்கையுடன். நமது எண்ணங்களைத் தாராளமாக வெளியிடுகிறோம், நமது எண்ணம் ஈடேற நம்மால் இயன்ற அளவு முயற்சிகள் செய்கிறோம், எனவே நமது நெஞ்சிலே பாரம் இல்லை. குமுறலை வெளியே தெரியவிடாதபடி அடக்கிவைத்துக்கொண்டு இருக்கும் தொல்லை நமக்கு இல்லை. ஆனால் எண்ணற்றவர்கள், குமுறலை வெளியே கொட்டிக்காட்ட முடியாதநிலையில், மனதிலேயே அடக்கிவைத்துக்கொண்டு மெத்த வேதனைப் படுகிறார்கள். அவ்விதமான நிலையினர், வடக்கே நிரம்ப இருக்கிறார்கள் — வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்பது அவர்களுக்குப் புரிகிறது, ஆனால் வெளியே சொல்லமுடியுமா?

> வேலைப்பளு தாங்கமுடியவில்லை

என்று மேலதிகாரி நண்பரிடம் கூறும்போது, மாடு போல் உழைக்கும் 'குமாஸ்தாவுக்கு' பொய்! பொய்! பச்சைப் பொய்! பதினொருமணிக்குவந்தார், படம் நிரம்பிய பத்திரிகை படித்தார், சாய்வு நாற்காலியில் படுத்தார், நாலுமணிக்கு எழுந்து, காப்பி! காப்பி! என்று கூச்சலிட்டார்!! இதுதான் அவருடைய வேலைப்பளு என்று கூறமுடிகிறதா? அதுதான் உண்மை! ஆனால் கூறமுடிகிறதா? பொய் பேசுபவரோ, மேலதிகாரி! உண்மையை உரைத்திட முடியாமல் திணறுபவனோ பாடுபடும் சிப்பந்தி!!

அதுபோல, வடநாட்டிலே பிழைக்கச் சென்றுள்ள ஏராளமானவர்கள், தாம் உணர்ந்ததை உரைத்திடமுடியாமல் குமுறுகின்றனர். உண்மையைக் கூறினால் பிழைப்பிலே மண் விழுமே என்ற அச்சம். அவர்களென்ன, தம்பி! டி. டி. கிருஷ்ணமாச்சாரிகளா, பதவி தேடிவரும் என்று பிகுவுடன் இருந்திட!! இங்கே வாழ, தக்கவழியின்றி அங்கு சென்று வதைபட்டுக்கொண்டிருப்பவர்கள், அத்தகைய மனப்போக்கினர், வடக்கே எல்லாத்துறைகளிலும் உள்ளனர்; பட்டாளம் முதற்கொண்டு பாரம் தூக்கிப் பிழைக்கும் துறைவரையில். அவர்களுக்கு ஏக இந்தியா என்பது, சுமந்துதீரவேண்டிய ஒரு ஏற்பாடாகத்தான் இருக்கிறதே தவிர, சுவையும் பயனும் தரும் பொருளுள்ள, ஏற்புடைய திட்டமாகத் தோன்றவில்லை.

இந்த மனப்போக்கைப் புரிந்துகொள்ள ஒரு நிகழ்ச்சி எனக்கு வாய்ப்பளித்தது.

தில்லியிலே, பல்வேறு துறைகளிலே பணியாற்றிடும் தமிழர்கள் ஓர் அமைப்பு ஏற்படுத்திச் செம்மையாக நடத்திக்கொண்டு வருகின்றனர், தமிழ்ச்சங்கம் என்ற பெயரில். அங்கு ஒருமாலை எங்களை அழைத்திருந்தனர் —பாராட்ட. வழக்கமான நிகழ்ச்சியாம்.

நான் மண்டபத்தில் நுழைந்தபோது, ஆரவாரத்துடன் வரவேற்றனர். ஏற்கனவே பலர் மேடைமீது அமர்ந்திருந்தனர். நான் சென்று உட்கார்ந்ததும் இரயில்வேத்துறையில் அமைச்சராக உள்ள சேலம் இராமசாமி அவர்கள் என்னைப்பார்த்து,

> பாரப்பா! நீ வந்தபோதுதான் இவ்வளவு
> கரகோஷம். நாங்கள் வந்தபோதெல்லாம்
> இல்லை. உனக்குத்தான்.

என்று கூறினார். உபசாரமொழி கூறியவருக்கு நன்றி கூறினேன். ஆனால் அவரோ என்னிடம் சொன்னதோடு விடவில்லை. அவர் பேசும்போது இதனைக் குறிப்பிட்டுப் பேசினார்—சற்றுச் சாமர்த்தியமாக!

> நாங்களெல்லாம் வந்தபோது, கைதட்டி
> வரவேற்கவில்லை. ஆனால் அண்ணாதுரை
> வந்தபோது மட்டும் ஏகப்பட்ட கைதட்ட
> லோடு வரவேற்றீர்கள்"

என்று கூறினார். அதைக்கேட்டு மறுபடியும் மண்டபத்திலிருந்தோர் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். எனக்குச் சிறிதளவு சங்கடமாகத் தென்பட்டது; இது பற்றி அமைச்சர் குறிப்பிடாமலே பேசியிருக்கலாமே என்று எண்ணிக்கொண்டேன். அவருடைய பேச்சின் துவக்கம், அவர் மிகப் பக்குவமாகப் பேசப்போகிறார் என்றே என்னை எண்ணிக்கொள்ளவைத்தது, ஏனெனில், சிறிதளவு கெம்பீரமாக அமைச்சர் இராமசாமி,

> இங்கு அரசியல் பேசத் தேவையில்லை

என்று தெரிவித்தார். ஆகவே அவர் அரசியல் பற்றிப்

பேசமாட்டார் என்று கருதிக்கொண்டிருந்தேன். என்னைப் பற்றி அவர் பேசவே எனக்கு ஐயம் எழுந்தது. அமைச்சர் அந்த அளவோடு நிறுத்திக்கொள்ளவில்லை. தில்லித் தமிழ்ச் சங்கத்தார் என்னை ஆர்வத்தோடு வர வேற்றூர்கள் என்பதை, மகிழ்ச்சிதர, அல்லது உபசாரத் துக்காக அவர் கூறவில்லை என்பதை எடுத்துக்காட்டி னூர்; சாமர்த்தியமாக, அதனை 'பிரசார'த்துக்குத் திருப் பிக்கொண்டார்.

> யாருக்கும் இல்லாமல் அண்ணுதுரைக்கு மட்டும்இவ்வளவுகைதட்டி வரவேற்புக்கொடுத் தீர்களே, ஏன் தெரியுமா? காரணம் இருக் கிறது. இப்படி வரவேற்புக் கொடுத்து, அண்ணு! வாருங்கள்! எங்களை எல்லாம் பாருங்கள்! இந்தியாவைப் பிரிக்காதீர்கள்! எல்லோரும் ஒன்ருக வாழலாம். பிரிவினை வேண்டாம்! என்று அவருக்கு நீங்கள் இந்த வரவேற்பின் மூலம் தெரிவிக்கிறீர்கள்.

அமைச்சர் இவ்விதம் பேசக்கேட்டு நான் சற்று வியப் படைந்தேன். பரவாயில்லையே, நம்மைப் பாராட்டுவது போல ஆரம்பித்து, நமது கொள்கையைத் தாக்க, இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்கிருரே, கெட்டிக் காரர்தான் என்று எண்ணிக்கொண்டேன்.

தம்பி! நாடு பிரிவினை கூடாது, இந்தியா ஒன்ருக இருக்கவேண்டும் அதற்காகவே வரவேற்ருர்கள், என்று சாமர்த்தியமாக அமைச்சர் பேசிய உடன், அங்கு கூடி யிருந்தோர், ஏகஇந்தியா வேண்டும், பிரிவினை கூடாது என்ற கருத்துடையவர்களாக இருப்பின், எத்துணை எழுச்சியுடன் கைதட்டி ஆரவாரம் செய்து, அமைச் சரின் கருத்தினை ஆதரித்திருக்க வேண்டும். அதனை எதிர்பார்த்துத்தானே அமைச்சர் அவ்விதம் பேசினூர். அங்கு கூடியுள்ளவர்கள் ஏக இந்தியா வேண்டும் என்ப திலே திட நம்பிக்கையும் பிரிவினை விஷயத்திலே வெறுப்பும் கொண்டவர்கள் என்பதை அவர்களின் ஆரவாரத்தின் மூலம் நான் தெரிந்துகொண்டு, வெட்கப் பட்டுச் செச்சே! பிரிவினைக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்கும்போது நாம் ஏன் அதனைக்கூற வேண்டும் என்று உணர்ந்து வெட்கப்பட்டுத், திருந்திவிட வேண்டும், அல்லது குழம்பிப்போகவேண்டும் என்று தானே அமைச்சர் எதிர்பார்த்து, அவ்விதம் பேசினூர். ஆனுல் நடந்தது என்ன தெரியுமோ, தம்பி! நானே திடுக்கிட்டுப் போனேன்.

ஏக இந்தியா எனும் கருத்துக்கு ஆதரவு திரட்ட அமைச்சர் அவ்விதம் பேசியதும், ஒருவர் கைதட்ட வேண்டுமே! அதுதான் இல்லை! குண்டூசி கீழே விழுந்தால்கூட சத்தம் கேட்கும்— அவ்வளவு அமைதி. அவ்வளவு 'ஆதரவு' அமைச்சரின் பேச்சுக்கு. ஒரு அமைச்சர் சிரமப்பட்டுச் சாமர்த்திய மாகப் பேசி என்னை மடக்க எடுத்துக்கொண்ட முயற் சிக்காக ஒரு நாலு பேராவது கைதட்டக் கூடாதா என்று எண்ணி நானே பரிதாபப்பட்டேன், என்ருல் அமைச்சரின் போக்கு எப்படி இருந்திருக்கும் என்பதைத் தம்பி! எண்ணிப்பார்த்துக் கொள்ளேன்.

தம்பி! அமைச்சர் நையாண்டி பேசிப், பிரிவினை யைத் தாக்கியதை நாங்கள் ஒப்பவில்லை, விரும்பவில்லை, என்பதை அந்த அமைதி மிக விளக்கமாக எடுத்துக் காட்டிற்று. அதுவும் போதாது என்று கருதியோ என்னவோ இரண்டொருவர் அரசியல் கூடாது! என்று உரத்த குரலிற் கூறினர்.

துவக்கத்திலே அமைச்சர் சொன்னூரல்லவா அரசியல் பேசக்கூடாது என்று; அந்த உபதேசத்தை மக்கள் உபதேசி யாருக்கே உபதேசித்தனர். மேற்கொண்டு அமைச்சர், ஏக இந்தியா பற்றியோ பிரிவினை பற்றியோ பேசவில்லை, அரசியலே பேசவில்லை, அதிகம் பேசவில்லை, இரண் டொரு விநாடிகளிலே அவர் பேச்சும் முற்றுப்பெற்றது.

இந்த நிகழ்ச்சி, வடக்கே உள்ள நமது மக்கள் ஏக இந்தியா எனும் ஏற்பாட்டிலே சொக்கிப் போய்விட வில்லை, பிரிவினையை வெறுத்திடவில்லை என்பதை விளக்கமாக்கிற்று. ஆனுல் அவர்கள் ஈடுபட்டிருக்கும் அலுவல், அவர்களை உள்ளத்தைத் திறந்து பேசவைக்க வில்லை.

ஒரு சிறிய நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு உன் அண்ணன் ஏதேதோ வலியப் பொருள் வரவழைத்துக் காட்டுகிருன், என்று கூறுவார்கள், நமது வழிக்கு வர மறுக்கும் நண்பர்கள். இது போதாது, வெளிப்படை யாக, விளக்கமாக, வடக்கு—தெற்கு பற்றி உங்களைப் போலக் கண்டித்தும் குமுறியும் பேசுகிருர்களா, இங்கிருந்து வடக்கே போய் வாழ்கினறவர்கள், என்று கூடக் கேட்பார்கள். தம்பி! பேசுகிருர்கள் என்று நான் சொன்னுல், ஆதாரம் என்ன? சான்று உண்டா? என்று குடைவார்கள். இருக்கிறது, தம்பி! பேச்சுக்கூட அல்ல, எழுத்தே இருக்கிறது, வடக்கே சென்று தங்கி யுள்ள நம்மவர்களின் எண்ணத்தை எடுத்துக்காட்டும் விதமாக. இதோ, அது.

அன்புள்ள அக்கா,

வணக்கம் பல. முன்பின் அறியாத நான் தங்க ளுக்குக் கடிதம் எழுத முற்பட்டது, சமீபத்தில் கல்கத் தாவிலிருந்து வெளிவரும் 'The Statesman' தினத் தாளில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய அபத்தமான குற்றச்சாட்டே காரணமாகும்.

வடநாட்டில் வாழும் எங்களுக்கு வடவரது தொல்லைகள் பரிபூரணமாகத் தெரியும். தென்னுட்டில் வாழும் தமிழர்களுக்கு வடவர் தமிழர்மீது செலுத்தும் ஆதிக்கம் புரிய நியாயமில்லை.

என் வாழ்நாட்களில் பெரும் பகுதி வடநாட்டில் தான் கழித்திருக்கிறேன். கல்யாணமாகாது தந்தையுடன் இருந்த நாட்களில் டில்லி, காராச்சி, பம்பாய், நாகபுரி, ஆகிய நகரங்களில் இருந்திருக்கிறேன்.........

இப்போதும் நான் மணமாகிய ஒன்பது ஆண்டுகளையும் வடக்கேயே கழித்து இருக்கிறேன். ஜரியா, கல்கத்தா, ராஞ்சி, தற்போது இருக்கும் ஜாகராகண்டு எல்லாம் வடநாடுதானே! சுதந்திர இந்தியாவில் நாங்கள் படும் அவஸ்த்தை சொல்லிமாளாது. என் கணவரும் ஒரு பெரிய பதவி வகிக்கும் ஆபீசர்தான்.

சர்க்கார் துறையிலும் இவர் வேலையில் இருந்தார். இப்போது தனியார் துறையில் இருக்கிறார். **சர்க்கார் துறையில் தமிழர்கள் வடவரால் எவ்வளவு இழிவாக நடத்தப்படுகின்றனர் என்பதைச் சொல்லாமல் இருப்பதே மேல். தனியார் துறையில் அவ்வளவு துன்பங்கள் இல்லை என்றாலும், சக ஊழியர்களான வடவர்கள் சமயம் வாய்த்த போதெல்லாம் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தத் தவறுவதில்லை.........**

தென்னாட்டில் எப்படியோ தெரியாது, வடநாட்டில் வாழும் தமிழர்கள் வெளியில் பகிரங்கமாகக் கூறுவிட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை முழுமனதோடு ஆதரிக்கிறார்கள். **முன்னேற்றக் கழகம் 50 ஸ்தானங்களைப் பற்றியது முக்கியமாக எங்களுக்குச் சொல்லமுடியாத மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. வயிற்றுப் பிழைப்புக்காகத் தான் தமிழர்கள் இன்று வடக்கில் வாழ்கிறார்களேயன்றி, வடவர் மேல் உள்ள மோகத்தால் அல்ல அக்கா! குழந்தைகளுக்கு நாங்கள் இந்தி கற்பிப்பதற்குக் காரணம் அந்த மொழியின்மீதுள்ள மோகத்தால் அல்ல, வேறு வழியில்லாததனால்தான்.**

❋

தம்பி! வடக்கே இருக்கும் தமிழ்ப் பெண்மணி, இராணிக்கு அனுப்பியிருந்த கடிதத்திலே சில பகுதிகள் மேலே வெளியிடப்பட்டவை. நன்றாகப் படித்தவர், அவசரப்பட்டு முடிவு எடுக்கும் இயல்பு இருக்கக் காரணமில்லை... பார்க்கிறாயல்லவா, மனக் குமுறல் இருக்கும் விதத்தை. இப்படி எண்ணி எண்ணிக் குமுறிக்கிடப்பவர்கள் நிரம்ப அங்கு. கழகத்துக்கும் அவர்களுக்கும் ஒரு தொடர்பு இல்லை—கருத்து அந்த அளவு பரவிப் பதிந்துவிட்டிருக்கிறது. **கல்கத்தா ஆங்கில இதழில், கழகத்தைக் கண்டித்து எழுதப்பட்டது கண்டு மனம் குமுறி, இப்பெண்மணி, உடனே, சுடச்சுட நான் ஒரு மறுப்புரை அந்த இதழுக்கு எழுதி அனுப்பவேண்டும் என்பதற்காக, இராணிக்குக் கடிதம் அனுப்பினார்கள் என்றால், எவ்வளவு அக்கறையும் ஆதரவும் காட்டியிருக்கிறார்கள் கழகத்திடம் என்பது புரிகிறதல்லவா?** நான் தில்லி புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இக்கடிதம் கிடைத்தது. **தில்லியில் ஏற்பட்டுப்போன அலுவல் காரணமாக, நான் கல்கத்தா இதழுக்கு மறுப்பு எழுதமுடியவில்லை. ஆனால், பார் தம்பி! கடமை உணர்ச்சியை; நான் எழுதத் தவறிவிட்டேன், ஆனால் ஒரு வாரத்துக்குப் பிறகு பார்க்கிறேன், அந்தப் பெண்மணியே, மறுப்பு எழுதி, ஆங்கில இதழிலே வெளிவந்தது. ஒருபுறம் எனக்கு வெட்கம், மற்றோர் புறம் மெத்த மகிழ்ச்சி. நெடுந்தொலைவிலே இருப்பினும் கொள்கைக்காக வாதாடும் அக்கறை இருப்பது கண்டு மகிழ்ச்சியுற்றேன்.**

தம்பி! ஏக இந்தியா என்பது போலி, பொருளற்றது, சுவையற்றது, பயனற்றது இல்லை என்ற உணர்ச்சி உள்ளவர்கள் ஏராளம்; ஆனால் அதனை வெளியே எடுத்துக்கூறும்நிலை, எல்லோருக்கும் இல்லையே!! எத்தனையோவிதமான நிலைமைக் கோளாறுகள் — நெருக்கடிகள்—இடர்ப்பாடுகள்.

திராவிடம் தனித்தன்மை வாய்ந்தது, தனி அரசு நடாத்தமுடியும், நடாத்தவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ளே மட்டும்தான் இருக்கிறார்கள், என்று எண்ணிக் கொள்கிறார்கள், காங்கிரசார். மிகப் பெரியதவறு!

அவ்விதமான நம்பிக்கையும் விருப்பமும்கொண்டவர்கள் தி. மு. கழகத்துக்கு வெளியேயும் இருக்கிறார்கள்—பலப்பலர். இந்த உண்மை, தி. மு. கழகத்துக்குப் புதிய உற்சாகத்தையும் வலிவையும் தந்துவருகிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

நீயேற்றதே தொண்டு

★ கனகு ★

"சார் உங்களை ஒரு அம்மையார் வந்து கேட்டுவிட்டுப் போனார்கள்!"

"அம்மையாரா, என்னையா? இருக்காதே! ஒருவேளை என் பெயர் உள்ளவர்கள் வேறு யாராவது இந்தத் தெருவில் புதிதாகக் குடியேறி இருக்கிறார்களோ!"

"இல்லை சார், உங்களையேதான் கேட்டார்கள். உங்கள் பெயரைச் சொன்னார்கள். உங்கள் அலுவலைச் சொன்னார்கள்."

"அலுவலைக் கூடவா! என்னவென்று சொன்னார்கள்?"

"வேறு என்னவென்று — எழுத்தாளர் என்றுதான்"

"நான் எழுதுவது உங்களுக்கெல்லாம் வெறும் அலுவலாகப் போய்விட்டதா?"

"என்ன சார் அலுவல் என்று சொன்னதற்குக் கோபித்துக்கொள்கிறீர்கள்! பாரதியாரேகூடப் பாடிவிட்டுப் போயிருக்கிறாரே—நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல் என்று கவிதையாத்தலையும், நாட்டுக்குழைப்பதையுமே தொழில்கள் என்று."

"சரி, வாதம் வளரவேண்டாம். என்னைக் கேட்டுவிட்டுப் போனவர்கள் முகவரி தந்துவிட்டு அல்லது சொல்லிவிட்டுப் போனார்களா?"

"முகவரியொன்றும் தரவில்லை, சொல்லவில்லை" என்று கூறி என்னை வந்து விசாரித்துவிட்டுப் போன அந்தப் பெண்ணின் அடையாளம் முழுதையும் நண்பர் சொன்னபோது, எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு திங்களுக்கு முன்பு எந்தப் பெண்ணைப்பற்றிய செய்தியைக் கதைக் கருவாக வைத்துக்கொண்டு நான் எழுதியிருந்தேனோ, அதே பெண்தான் என்னை வந்து தேடியிருக்கிறாள். ஆனால் நண்பர் சொல்வதில் ஒரு மாற்றம் தென்படுகிறதே! அந்தப் பெண் கதரைத் தவிர வேறு எதையும் அணிந்திருப்பதை நான் பார்க்கவில்லையே!—ஒரு வேளை அலுவலிலிருக்கும்போது கதர், மற்ற வேளைகளில் வேறு உடை என்ற வழக்கம் உள்ளவளோ! — அது எப்படியோ போகட்டும், அவள் என்னை ஏன் வந்து விசாரித்துவிட்டுப் போனாள்? நான் எழுதிய கதையை அவளும் படித்துவிட்டிருப்பாளோ! அது அவளையே குறிப்பதாக இருப்பதை என்னிடம் வந்து சொல்லி, என்னைக் கண்டபடி திட்டிவிட்டு, — வழியிருந்தால்—என்மீது வழக்குத் தொடுக்கவும் முயன்று கொண்டிருக்கிறாளோ!

வழக்குத் தொடுப்பது முடியாத காரியம். ஆனால், கண்டபடி திட்டிவிட்டு, ஊர் சிரிக்கும்படி செய்துவிட்டு வேண்டுமானால் போகலாம் அவள்! இதற்கு என்ன செய்யலாம்? வேறு என்ன செய்வது? குடியிருக்கும் இடத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான். அடடே, இந்த வீட்டைக் காலி செய்துகொண்டு எப்படிப் போவது! இந்த வீட்டை இலேசிலா கண்டுபிடித்து அமர்த்த முடிந்தது! இனி இந்த மாதிரி வசதியான வீட்டைக் கண்டுபிடித்துக் குடியேறுவது இலேசிலே முடியக்கூடிய காரியமா? அதற்கு ஒரு மாதமாவது அலையவேண்டுமே! — என் யோசனையும் வேதனையும் ஒருபுறம் இருக்கட்டும்! அந்த யோசனை என்றுமுள்ள யோசனை. அந்த வேதனை— சமுதாய நிகழ்ச்சிகளை ஊன்றிப் பார்த்து, அதிலுள்ள புண்களைச் சுட்டிக்காட்ட விரும்பும் என் போன்ற எழுத்தாளர்களோடு இரண்டறக் கலந்துபோன வேதனை. நீங்கள் கதையைக் கேளுங்கள்.

பிரயாணிகள் ஊர்தி புறப்படுவதற்கு இன்னும் ஐந்து நிமிடமே இருந்தது. நான் பரக்கப் பரக்க ஓடிப்போய் அந்தப் பேரூர்தியில் ஏறிக்கொண்டேன். பேரூர்தி நிரம்பி வழிந்தது. எனக்குப் பின்னால் ஒரு ஆறுபேர் வந்து ஏறிக்கொண்டார்கள். எல்லாருக்கும் மளமளவென்று சீட்டுகள் கொடுத்தான் கண்டக்டர் கழுகுமலை. கடைசியாக வந்து ஏறிய ஐந்து பேருக்கு ஊர்தியில் இடமில்லை. அந்த ஐந்து பேரும் கூச்சல் போடத் தொடங்கினார்கள். ஐந்து நிமிடம் ஆகிவிட்டது. இனி ஊர்தி கிளம்பவேண்டியதுதான். கழுகுமலை திகைத்தான். 'ஐந்துபேருக்கு எப்படி இடமில்லாமற் போகும். எல்லாருக்கும் இடம் சரியாக இருக்கவேண்டுமே...! மளமளவென்று கொடுத்த சீட்டுகளை எண்ணினான். தீயை மிதித்துவிட்டவன்போல் ஒரு குதி குதித்து நின்றான் கழுகுமலை. "ஐயா, மன்னித்து விடுங்கள் ஐயா! ஒரு ஐந்து சீட்டுகள் அதிகமாகக் கொடுத்துவிட்டேன் ஐயா! கடைசியாகச் சீட்டு வாங்கியவர்கள் ஐந்துபேரும் தயவு செய்து இறங்கிக்கொள்ளுங்கள் ஐயா! இதோ சில்லறை!" வருந்திக் கெஞ்சிக்கொண்டு கோரிக்கை விடுத்தான் கழுகுமலை.

அவனுடைய பரிதாபகரமான கெஞ்சுதலைப் பார்த்து உடனே கீழே இறங்கிக் கொண்டார்கள் மூவர். எஞ்சிய இருவரோ அவன் கெஞ்சுதல் புரியப் புரிய மேலே ஏறிக்கொண்டு போனார்கள். கழுகுமலை செய்துவிட்ட தவறினைக் குற்றமாக்கிக் காட்டி அவனைக் கண்டிக்க, குறுக்குக் கேள்வி கேட்க வாய்த்துவிட்ட அந்த அருமையான சந்தர்ப்பத்தைச் சரியானபடி — முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொண்டார்கள். முடிவில் ஊர்தியில் இருந்த அத்துணைபேரும் கழுகுமலைக்காகப் பரிந்து பேசவேண்டுவதாயிற்று— ஊர்தி குறித்த காலத்தில் நகராமல் காலச் சுணக்கம் வளர்வதைத் தவிர்க்கும் பொருட்டு. அப்படியும் அந்தக் கண்டிப்புப் பேர்வழிகள் அசையவில்லை. கடைசியாக ஒரு ஆள் தன்னுடைய அதட்டற் குரலைப் பயன்படுத்திய பிறகுதான் அந்த இருவரும் ஊர்தியிலிருந்து இறங்கினார்கள்.

எனக்கு அந்த நிகழ்ச்சி ஒருபுறம் வேடிக்கையாக இருந்தது; பிறிதொரு புறம் விந்தையைக் காட்டியது. வேடிக்கை: நியாயத்தையும் உண்மையையும் பலமுறை பலர் எடுத்துச் சொன்ன பிறகும் பிடிவாதம் பிடித்து நின்ற அந்த இருவரின் செய்கை. விந்தை: என்றுமே இப்படித் தவறு புரியாத கழுகுமலை அன்று அப்படி ஒரு சின்னத் தவறு புரிந்துவிட்டுப் பெரிய அலைக் கழிப்புக்குள்ளாகியது.

கழுகுமலையை எனக்குக் கடந்த ஓராண்டு காலமாகத்தான் தெரியும். அதுவும் அவன் பேரூர்தியில் இந்த வழியில் வந்து போய்க்கொண்டிருப்பதால்; அவன் பணியாற்றிய பேரூர்தியில் பல தடவை நான் பயணம் புரிய வாய்ப்புக் கிட்டியதால். அவன் சொற்கள் மணி மணியாக இருக்கும், அவன் செய்கைகள் பட்டுக் கத்தரித்தாற்போல் தென்படும். இருபத்தைந்துக்கு உட்பட்ட அகவை. மாநிறமெனினும் எடுப்பான தோற்றம்; இயல்பான சிரிப்பு. அதிராத சொல்; அமைவான போக்கு. ஒரு நாள்,

ஊர்தி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. ஏனோ எதற்கோ அன்று நான் கழுகுமலையையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தேன். திடீரென்று அவன் மகிழ்ச்சிப் பெருக்கிற் குதிக்கத் தொடங்கியவன்போல் தென்பட்டான். ஊர்தி ஓரிடத்தை நெருங்கிக்கொண்டிருக்கும்போது தலையைத் தாழ்த்தியும் பக்கவாட்டில் நீட்டியும் ஊன்றி ஊன்றி எதையோ நோக்கிக்கொண்டு வந்தான். சட்டென்று சராய்ப் பையிலிருந்து ஊதியை எடுத்து அரிய பாடல் ஒன்றை இசைக்க விழைந்தவன்போல் உரக்க ஊதினான். ஊர்தி மெல்லச் சென்று நின்றது. இப்போது கழுகுமலையின் பார்வை பேரூர்தியின் வாயிற்பக்கம் நன்றாகப் படிந்து, ஆவல்மீதூர எதையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. திடீரென்று அவன் வெய்ட், வெய்ட், வெய்ட் ப்ளிஸ்' என்று உரக்கச் சொன்னான். அந்த இடத்தில் பேரூர்தியிலிருந்து சிலர் இறங்கவும் வேண்டியிருந்தது. அதனால்தான் அவன் அப்படிச் சொன்னான். என்றாலும் திடீரென்று அப்படியேன் அவன் அந்த இடத்திற்கு வந்ததும் ஆங்கிலச் சொற்களைப்பயன்படுத்துகிறான்;—அதுவும் அவன் இயல்பை ஒருபடி ஏற்றிக் காட்டுகின்ற குழைவான மொழியில். வியப்பு என்னை உந்தித்தள்ள, நான் இறங்குமிடத்திற்கு நேராகக் கீழே பார்த்தேன். அங்கே ஒரு தலைதான் என் கண்ணுக்குத் தென்பட்டது — பெண்ணின் தலை. 'ஓகோ, யாரோ சட்டைக்காரப் பெண்போலும்!' என்று எனக்குள் நான் சொல்லிக்கொண்டேன்.

இறங்க வேண்டுவோர் இறங்கிக் கொண்டனர். அந்தப் பெண் மேலே ஏறிவந்தாள். அவள் கைப்பையை கழுகுமலை வாங்கிக்கொண்டான்—அவள் ஊர்தியில் சிரமமில்லாமல் ஏறிக்கொள்வதற்கு. அந்தக் கைப்பை என் பார்வையிற்பட்டது. அது என்னை வியப்பில் ஆழ்த்தியது. அந்தக் கைப்பை,

டம்பப் பையைப்போல் அலங்காரவேலைகள் செய்யப்பட்டிருந்தாலும், டம்பப் பையல்ல. அதைப்போல் இரண்டுமடங்கு பெரியது. கனமானதும் அல்ல. அந்தப் பையைக் கையில் வைத்துக்கொண்டா அந்தப் பெண்ணால் ஊர்தியில் ஏற முடியாது? அப்போது கழுகுமலை மீது எனக்கு எரிச்சலாக வந்தது. எத்தனையோ தடவை நான்கூடப் பார்த்திருக்கிறேன்—சில பெண்டிர், முதியவர்கள் பேரூர்தியில் ஏறும்போதோ இறங்கும்போதோ மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டு அவதியில் சிக்கியவர்களாய்த் தடுமாறிக்கொண்டு ஏறுவதிலோ இறங்குவதிலோ பெருஞ் சிரமம் காட்டுவதை. அப்போதெல்லாம் அவர்களுடைய தடுமாற்றத்தினால், முடியாமையினால் பேரூர்தி கிளம்புவதில் சுணக்கம் ஏற்படுவதையே பெரிதாக எடுத்துக்கொண்டு 'உம் உம் ஆகட்டும் சீக்கிரம்' என்று அவன் துரிதப்படுத்திக்கொண்டுதான் பெரும்பாலும் நிற்பான். ஏறுபவர்கள், அல்லது இறங்குபவர்கள் அடைகின்ற தடுமாற்றத்தையும், சிரமத்தையும்விட, அவற்றால் ஏற்படும் காலத் தாழ்வைத்தான் பெரிதாக எண்ணி அவசரப்படுவான்; அவரப்படுத்துவான். இப்போது பேரூர்தி கிளம்புவதற்குக் காலத் தாழ்வு ஏற்படவில்லை. அந்தப் பெண்ணே சிரமமில்லாமல் ஏறிவருகிறாள், ஏறக்கூடியயவள். அவளுக்கு வலியப்போய் இவன் கைப்பையை வாங்கி உதவிசெய்கிறானே!

இப்போது கழுகுமலை தன் மதிப்பையெல்லாம் — மதிப்பையா, அன்பையா அல்லது......?—வாரி இறைத்த அந்தப் பெண்ணின்மீது என் பார்வை சென்றது. அந்தப் பெண்,

மூக்குக் கண்ணாடி அணிந்துகொண்டிருந்தாள். அவள் காதில், கழுத்தில், மூக்கில் ஒரு நகைகூடக் கிடையாது. அவற்றிற்குப் பதிலாகவோ என்னவோ அந்த மூக்குக் கண்ணாடி தங்கத்தால் ஆக்கப்பட்டிருந்தது. அழகான பெரிய கரைபோட்ட கதர்ப்புடைவை. செம்பருத்தி நூலாலான, ஆனால், வண்ணக் கவர்ச்சியுடைய இரவிக்கை. பூசூடிக்கொண்டிருக்கவில்லை அப்போது அவள். எனினும் பொலிவு மிஞ்சிய எழிற்குழலை அடியிற் காற்பகுதி பின்னாமல்விட்டு, நுனிப்புறம் முற்றும் பின்னி எளிமையைக் காட்டி, அதன் கூட்டினால் பொலிவெழில் சொட்டச்செய்துகொண்டிருந்தாள். கச்சிதமான தோற்றம். எனினும் 'பார், பார்! பார்த்து மெச்சு மெச்சு' என்று கவர்ந்திழுக்கும் கச்சிதம் அது.

ஊர்தி நகர்ந்தது! ஓடியது. அவள் போய் அமர்ந்தாள். அவள்பின்னால் கழுகுமலை சென்றான். இன்னும் அவளுடைய கைப்பை அவன் கையிலிருந்தது. அந்தக் கைப்பையைஅவள் கைக்கு மாற்றவேண்டும். அவளிடம் சீட்டுக்கொடுக்க வேண்டும். சில்லறை வாங்க வேண்டும். அப்பா! இத்தனை வேலைகளிருக்கும்போது அவள் பின்னால் செல்லாமலிருக்க முடியுமா அவனால்? ஒரு வரிசை இருக்கையில் ஓட்டிலே அவள் அமர்ந்துகொண்டாள். அந்த ஓட்டருகே தூணென நிற்கும் ஒரு கம்பி. அந்தக் கம்பியில் சாய்ந்தவாறு அவன் நின்றுகொண்டான். முதலில் கைப்பையை அவளிடம் அவன் நீட்டினான். அதைப் பெற்றுக்கொண்டு 'நன்றி' என்ற சொல்லையும், யாரும் எளிதிலே அவளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாததொரு புன்னகையையும் அவனுக்களித்தாள் அவள். அப்பப்பா, அவ்வேளை கழுகுமலையின் உச்சிமுதல் உள்ளங்கால்வரை எப்படிக் குளிர்ந்ததோ! அப்படியே சொக்கி நின்றான் அவன்.

அவன் சீட்டெழுதச் சிறுபொழுதாயிற்று. சீட்டெழுதி அவளிடம் நீட்டினான். அவள் அதனைப் பெற்றுக்கொண்டு சில்லறையை நீட்டினாள். அந்தச் சில்லறையை அவன் பெறும்போது தன்னையொரு இயந்திரமென அவள் எண்ணிக்கொண்டிருப்பாளோ என்ற ஐயம் பிறந்துவிட்டதோ என்னவோ அவனுக்கு! அவன் ஒரு புன்னகையை மலர்த்திக் காட்டினான். அந்தப் புன்னகை அவளைச் சரியான சந்தர்ப்பத்தில் சரியானபடி கவர்ந்துவிட்டதோ! அப்படியே அவள் சிந்திக்கும் சிலையாக மாறிவிட்டாளே! ஏன்?

கழுகுமலை அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அங்கிருந்தபடியே சீட்டுகளைப் புரட்டினான். சரிபார்த்தான். ஆட்களை எண்ணினான். அங்கு நின்றுகொண்டேயிருந்தான்.

ஊர்தி ஓரிடத்தில் நின்றது. சிலர் இறங்கினர். சிலர் ஏறினர். அப்

போது வெளியில் ஒருவர் ஊர்தியை ஒருமுறை சுற்றிக்கொண்டுவந்து விட்டு ஒருபுறமாக நின்ருர். அவர் "ஐயை!" என்ற குரல் கொடுத்தார்.

அந்தக் குரலைக் கேட்டதும் அந்தப் பெண்—ஆமாம் கழுகுமலையின் கண்ணேயும் கருத்தையும் கவர்ந்து விட்ட அந்தப் பெண் எழுந்து நின்ருள். அழைத்தவர் நின்ற பக்கமாக வந்து ஊர்திக்கு வெளியே தலை நீட்டிக்கொண்டு உரையாடத் தொடங்கினுள்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. ஆமாம் 'ஐயை' என்ற அந்த இலக்கியப் பழந்தமிழ்ப் பெயரைக் கேட்டதால் அல்ல. அந்தப் பெயருக்குரியவள் யார் என்று கண்டதால். எடுத்ததற்கெல்லாம் தமிழ் அல்லாத சொற்களாகப் பார்த்து—சைனிக், சேவக் என்று பெயர் சூட்டிக் கொண்டுபோகும் ஒரு அமைப்பின் ஆணைக்குட்பட்டுத் தொண்டுபுரிய வந்த பெண்ணொருத்தி, நல்ல தனிச் செம்மொழிப் பெயரை வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டு வியப்பேற்படுவது விந்தையல்லவோ!

ஊர்தி கிளம்பியது. ஐயை தன் இடத்தில் வந்து அமர்ந்தாள். புதிதாக ஊர்தியில் ஏறியவர்கள் போக வேண்டிய இடங்களைக் கேட்டுக் கொண்டு பழையபடி ஐயைக்கருகே வந்தான் கழுகுமலை. அங்கு நின்று கொண்டான். சீட்டுகள் வழுங்கத் தொடங்கினுன். இனி ஐயை அந்த ஊர்தியிலிருந்து இறங்கும் வரை அந்த இடத்தில் நின்றுகொண்டு ஆற்றினுல்தான் எதையும ஆற்ற முடியும் போலும் அவனுல்.

மறுபடியும் ஊது குழலை எடுத்து ஊதினுன் கழுகுமலை. ஊர்தி மெல்ல சென்று நின்றது. ஐயை எழுந்து நினருள். அது அவள் இறங்கவேண்டிய இடம். திரும்பவும் அவள் கையிலிருந்த பையை வலிந்து வாங்கிக்கொண்டான் கழுகுமலை. அவள் இட்ட அடிமேல் மற்ற அடிவைத்து மென்னடை நடந்து ஊர்தியிலிருந்து கீழே இறங்கினுள். அவளைத் தொடர்ந்து பின் சென்ருன் கழுகுமலை. இறங்கும் வழியில் கடைசிப்படியில் போய் நின்று கொண்டான். எதிர்பாராதவிதமாகக் கையில் சிக்கிய அருநிதியம் ஒன்று மறுபடியும் கைவிட்டுப்போவது போன்றதொரு நிலையில் அவன் அந்தக் கடைசிப் படியில் நின்ருன். அதில் நின்றவாறு தன்னிடமிருந்த கைப்பையை அவள் கைக்கு மாற்றினுன். ஏக்கப்பார்வையொன்றை அவள் பால் பரவவிட்டான். அவள் அவன் பார்வைக்குப் பதில் சொல்பவள் போல் ஒருமுறை அவனை ஏறிட்டு நோக்கினுள். 'ஏங்காதே, கலங்காதே! எந்நேரமும் உன் அருகிலேதான் நான் இருக்கிறேன் என்று எண்ணிக்கொள்!' என்று கூறுவதுபோல் அந்தப் பார்வை அமைந்தது. அவள் மெல்லத் திரும்பி எழில் நடைபோட்டாள். அவன் ஊதியை எடுத்து ஊதினுன். ஊர்தி மெல்ல நகர்ந்தது, விரைந்தது. அவள் ஒருமுறை அவனைத் திரும்பிப்பார்த்தாள். அவன் வண்டியின் கடைசிப்படியில் நின்றவாறு அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவள் போய்க்கொண்டிருந்தாள். ஊர்தி ஓடிக்கொண்டிருந்தது. அவள் தலை மறையுமட்டும் அவளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்துவிட்டுத் தன் இருக்கையில் வந்து அமர்ந்தான் அவன்.

இப்போதுதான் நினைவு வந்தாற்போல் சட்டென்று அவன் அந்த ஊர்தியிலிருந்த ஒவ்வொருவர் முகத்தையும் வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அவ்வளவு நேரம் தன் போக்கையும் செயலையும் அங்குள்ளோர் எல்லோரும் ஊன்றிப் பார்த்துக்கொண்டேதான் இருந்திருப்பார்களா என்ற ஒருவகைக் கூச்சமும், நாணமும் அவன் நோக்கில் படிந்துகிடந்தன. பல்வேறு இடங்களிலிருந்து ஏறிப், பல்வேறு இடங்களிலேபோய் இறங்கப்போகும் அந்தப் பிரயாணிகள் எல்லாம் தன் செயல் பற்றியும், போக்குப்பற்றியும் என்ன எண்ணிக்கொள்கிருர்களோ, எண்ணிக்கொள்வார்களோ என்று அவன் தனக்குள் எண்ணிப் பார்த்துக்கொண்டபோது வெட்கம் அவனைப் பிடிங்கித் தின்னத்தொடங்கியதுபோலும்! சட்டென்று தலை கவிழ்ந்துகொண்டான் அவன்.

அவன் அப்படித் தலை கவிழ்ந்து கொள்வதற்கு முன மற்றவர்களைப் பார்த்ததுபோல் என்னையும் ஒருமுறை பார்க்கத் தவறவில்லை, மற்றவர்களைவிட நான்தான் அவனை இமைகொட்டாது பார்த்துக் கொண்டே வருகிறேன் என்று அவள் கண்டுகொண்டானே என்னவோ! அவனை நாணத்திற்குள்ளாக்குவதற்கு உதவிய பார்வையின் பெரும் பகுதி என்னுடையதுதானே என்னவோ! என்னைத்தான் அவன் கடைசியாகப் பார்த்தான். என்னைப் பார்த்த பிறகுதான் அவன் தலை தாழ்த்திக் கொண்டான்.

நான் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அந்த ஊர்தியில், அந்த வேளையில், அந்த வழியிற் பயணம் செய்யவேண்டிய நிலையிருந்தது. நான் பயணம் செய்யும் வேளையெல்லாம் சொல்லிவைத்தாற்போல் கழுகுமலையே அந்த ஊர்தியில் இருந்தான். குறித்த இடத்தை ஊர்தி நெருங்கிக் கொண்டிருக்கும் போதே ஆவல் தேங்கிய கண்ணினுய் இப்படியும், அப்படியும் எதிரே நோக்கத் தவறவில்லையவன். சிறு பொழுதில் இசையெழுப்புவதுபோல் தன் ஊதியை எடுத்து மெல்ல ஊதத் தவறவில்லை அவன். அங்கே ஊர்தி நிற்கும். ஐயை எதிர்கொண்டு நிற்பாள். ஏறிக்கொள்வாள் ஊர்தியில். பின்னர் மற்றவை, மற்றவையெல்லாம் அந்த ஒருநாளைப்போல நிகழ்ந்தே தீரும். அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடாமல் நான் பார்க்கத் தவறியதே கிடையாது.

கடந்த வாரம் முழுதும் நான் இந்தப் பக்கம் தலைகாட்டவில்லை. இன்றுதான் வருகிறேன். என்றும் போல் கழுகுமலைமீதுதான் என் கவனம் சென்றது. அவன் போக்கு என்னை வியப்பில் ஆழ்த்தியது. 'என்றுமில்லாமல் இப்படியேன் இன்று தடுமாற்றத்தில் சிக்கிக் கொண்டு தவிக்கிருன் கழுகுமலை. எவ்வளவுதான் பரபரப்புக்குரிய நிலையாலும் குறுநகை தவழ, நிதானம் இழக்காமல் எதையும் ஆற்றுங் குணமும், திறனும் படைத்தவனுயிற்றே கழுகுமலை. இன்று ஏன் இப்படி நிதானமிழந்து நிற்கிருன். அமைதியில்லாமல் தவிக்கிருன். அவன் முகத்தில் தவழும் அந்தக் குறுநகை எங்கே? அது மறைந்தது ஏன்? இந்த ஒரு வாரத்தில் நிகழ்ந்துவிட்டதுதான் என்ன? என் உள்ளம் படபடத்தது. கழுகுமலையிடமே அதனைக் கேட்டுவிடலாமா என்று கூட எண்ணினேன். இப்போது நானே குழப்பத்தில் ஆழ்ந்தவன் ஆனேன்.

ஊர்தி ஓடிக்கொண்டிருந்தது. என் எண்ணக் குழப்பத்தில் கழுகுமலையைப் பார்ப்பதை விடுத்து நான் எதிரே நோக்கிக்கொண்டிருந்தேன். ஐயை வந்து ஊர்தியில் ஏறுமிடம் என் மனத்திற்கூடப் பதிந்திருந்தது. அதோ அந்த இடம் வந்துவிட்டது.

எனக்குள் நானே 'அதோ அந்த இடம் வந்துவிட்டது' என்று சொல்லிக்கொள்ள ஏனோ விழைந்தேன். அந்த விழைவு முற்றும் இன்னும் செயலாகவில்லை. அதற்குள் வழக்கம்போல் ஊர்தி அந்த இடத்தை அடைந்ததும் கழுகுமலையின் ஊதியிலிருந்து எழுகின்ற இசையொலி என் காதில் பட்டது. ஊர்தி நிற்கும் பாவனை காட்டவில்லை. ஓடிக்கொண்டேயிருந்தது. ஏன்? ஊதியின் ஒலி ஓட்டுவோன் காதில் விழவில்லையோ!

நான் சட்டெனத் திரும்பிக் கழுகுமலையைப் பார்த்தேன். கழுகுமலை எழுந்தான். நிற்கவில்லை. 'அடடே! மடமடவென்று இறங்கும் வழியில் இறங்குகின்றானே!'

"நிறுத்து, நிறுத்து!"

உரக்கக் கத்தினேன். எழுந்தேன் பரபரப்போடு. இறங்கும் வழிப்பக்கம் ஓடினேன். நான் ஓடி அவனை நெருங்குவதற்குள் கழுகுமலை குதித்து முடித்துவிட்டான். ஐயோ! விரைந்தோடிக்கொண்டிருக்கும் ஊர்தியிலிருந்து குதித்து முடித்துவிட்டான். எந்த இடத்திலிருந்து ஐயை அந்த ஊர்தியிலேறுவாளோ, அந்த இடத்திலே கழுகுமலை வலியப் போய்க் குதித்துவிட்டான். என் கூச்சல் கேட்டு ஊர்தி நிறுத்தப்பட்டது. அது நின்ற இடம் கழுகுமலை குதித்துவிட்ட இடத்திலிருந்து ஐம்பதடிக்கு அப்பால்.

ஊர்தியிலிருந்தோர் எல்லாம் மடமடவென்று இறங்கிக் கழுகுமலையின் அருகில் ஓடினோம்! கண்ணீரும், கம்பலையுமாக ஊர்தி யோட்டியும் ஓடிவந்தார்.

கழுகுமலை அப்படியே வீழ்ந்து கிடந்தான். அவன் தலையில் நன்றாக அடிப்பட்டிருந்தது. குருதி வழிந்து கொண்டிருந்தது. உடல் எங்கும் நல்ல அடி. சிராய்ப்புகள். பேச்சில்லை, மூச்சில்லை அவனுக்கு.

"ஐயோ, இப்படியும் ஒரு ஆண்பிள்ளை கோழையாக இருக்கலாமா! போனால் போகிறாள் பாவிச் சிறுக்கி, கல் மனசுக்காரி என்று தூவென்று ஒதுக்கித் தள்ளமுடியாதவனாய் இருக்கலாமா? நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்ட ஒருத்திக்காக நல்ல உயிரை இழக்க முன்வரலாமா?—ஐயோ, படுபாவி!"

இப்படிக் கதறினார் ஊர்தியோட்டி. அவர் சொல்லியது எனக்கொன்றும் நன்றாகப் புரியவில்லை. அந்த வேளையில் அவரிடம் வினாத் தொடுக்கவும் முடியவில்லை. அவர் பலம் பலமாக அழ, வாறு நான் திகைத்துப் போய் நின்றேன்.

இடையே மற்றப் பிரயாணிகள் பரபரப்போடு இயங்கினார்கள். நல்ல வேளையாக ஊர்தியில் மருததுவர் ஒருவரும் இருந்தார். அவர் நல்லபடியாக முதல் உதவிகள் செய்தார். கழுகுமலை ஊர்தியில் ஏற்றப்பட்டான். அவன் பிழைப்பது கடினம் என்றே எல்லாரும் பேசிக்கொண்டார்கள்.

ஊர்தி மறுபடியும் கிளம்பி விரைந்தது. நான் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கவில்லை. நேரே மருத்துவமனைக்குச் சென்றேன் கழுகுமலையோடு. அங்கே ஊர்தியோட்டி சற்றே அமைதியோடு தென்பட்டார். நான் கேட்க விழைந்த வினாவை இப்போது கேட்டேன். அவர் சொன்னார்:

(தொடரும்)

வாழ்வுப் புத்தகம்!

★ முரளி ★

பூங்கோதை!

இக்கடிதத்தைக் கண்டதும் திகைப்படைவாய். அஞ்சல் உறை மீது என் பெயரைக் கண்டதும், பழங்கால நினைவுகள் உன் மனத் திரையில் ஓடும் என எண்ணுகிறேன். அந்தச் சலனத்தில் உண்டாகும் இதய வலியை நான் இங்கு உணருகிறேன். ஏன்? உன் இதயத்துடன் என் இதயத்தைச் சேர்த்து மகிழ்ந்த அந்தப்பழைய உறவுதான், முள்ளாகி உறுத்துகிறது! இசைத் தட்டைக் கூரிய ஊசியால் இயக்கி, இசை அனுபவிப்பதுபோல், என் இதயத்தில், அந்தப் பழைய உறவு முள் கீறி இசை பிறக்கிறது! ஆனால் அந்த இசை வேதனை கலந்த ஒன்றாக வெளிப்படுகிறது! இதனால், பழைய உறவைக் கூறி உன்னைத் தவறாக எண்ணிக்கொண்டதாக நினைக்காதே! உன்னை ஒருகாலத்தில் விரும்பியது உண்மை! ஆனால் சூழ்நிலை சதிசெய்துவிட்டது... நீ பிரிந்தாய்! நான் அந்தப் பழைய இன்ப நினைவுகளிலேயே காலம் கடத்துகிறேன்!

ஐந்தாண்டுகளுக்குமுன் அலுவலகப் பிரிவில் வேலைக்குச் சேர்ந்த அன்றைய நிகழ்ச்சி, பசுமை மாறாமல் என் உள்ளத்தில் சலனமற்றுத் தெரிகிறது — ஆறின புண்ணின் வடுவைப்போல்! ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் எத்தனையோ நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒன்றைத்தான் இறக்கும்வரையில் நினைத்து, நினைத்து, சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், இன்பமோ துன்பமோ உணருகிறான். அன்று நீ, என்முன் மருண்ட மானாக நிற்கவும், நான் எதிரில் இருக்கும் இருக்கையில் அமரும்படி கூற, செக்கர் வானம்போல், உன் கன்னம் சிவக்க, அலுவலக வேலைகளை உனக்கு விளக்க முற்பட்டேன். படிப்படியாக உன் குடும்ப நிலையையும், என் பரிதாபத்திற்குரிய வாழ்க்கையின் ஆரம்பத்தையும் பரிமாறிக் கொண்டோம். நீ வந்தபிறகுதான், வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டது. ஆனால் அந்தப் பிடிப்பு, கணத்தில் மறையும் மின்னலாகியது! மாற்றல் உத்தரவை என்னிடம் நீட்டினார்கள் அலுவலகத்தில்! அன்புக்குரியவளைப் பிரியவேண்டிய நேரம் நெருங்கியது! உன் முகமும் மேகம் மறைத்த நிலவாக மங்கிக் காட்சியளித்தது! அதற்கடுத்த நாள் காலை, அலுவலகத்திற்கு வந்தவுடன் என்னிடம் ஒரு காகிதத்தை அளித்தாய்! அருகிருந்தவர்கள் ஆவலுடன் நோக்கினர், அவல் கிடைக்கும் மெல்லுவதற்கென்று! ஆனால், அது ஒரு துண்டுப் பிரசுரம். பாவம்! ஏமாந்த முகங்கள் தொட்டாற் சுருங்கிச் செடியாகி துவண்டன! அந்தப் பிரசுரத்தின் மேல் அட்டையில், 'இதயத்தின்' படம்...! அதன்மேல், பெரிய எழுத்துக்களில் 'இதயத்துடிப்பு...?' எனறு எழுதி இருந்தது... ஒருகணம் என் இதயம் நின்றது. பிறகுதன் வேலையைத் துவங்கியது. அன்றுதான் உன் எண்ணத்தை நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது! அதை உன்னிடம் அமைதியாக அளித்தேன்... உன் தாமரை இதழ்போன்ற கண்களில் ஒரு கேள்விக்குறி... 'எண்ணத்தைப் புரிந்துகொண்டீர்களா?' என்றது. 'இதைப்படித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நிலையில்லை இன்று! ஏனெனில் கடந்த இருபத்துநான்கு மணி நேரமாக அனுபவத்திலேயே உணருகிறேன்!' என்றேன். கண்கலங்க நோக்கினாய்...காலத்தை உணர்ந்து கொள்! என்றேன். கண்களைத் துடைத்துக்கொண்டு, வேலையில் ஈடுபட்டாய். ஆனால் வேலை செய்தது ஒன்றுமில்லை!

அலுவலகத்தையும், உன்னையும் பிரிந்து, புது இடத்தில், புது வாழ்க்கை துவங்கினேன்! மனித வாழ்க்கை ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொருவிதமாக மாறுகிறது! இல்லை—மாற்றிக் கொள்ளுகிறான். ஏன்......? அந்தக் கேள்விக்குரிய விடைதான் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை என்னால். ஒரு வேளை, என் எதிரில் நீ இல்லாததாலோ என்னவோ......? ஆனால், மாதம் ஒருமுறையாவது உன்னைக் காண வராமல் இருந்ததில்லை. பேசும் வாய்ப்புத்தான் அமையவில்லை — நீயும் வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டு விட்டாய்! சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொண்டிருப்பேன். நம் சமூகம் அந்த அளவுக்கு இன்னமும் முன்னேறவில்லை.

இலைமறை காயாக இருந்த நம் எண்ணத்தை உணராத உலகம், பழி சுமத்தி, உன் இதயத்தைப் பாழாக்கி இருக்கும். பெண் ஒரு கண்ணாடிப் பாத்திரம்! அந்தப் பாத்திரம் விளம்பர அறையில் அழகாக வைத்திருக்கும் வரைதான் அதற்கும் மதிப்பு, அந்தக் கடைக்காரனுக்கும் நல்ல இலாபம். முறை தவறி உபயோகித்து, உடைத்து விட்டால், யாருக்கும் பயனில்லை! ஆகவே, நான் மிகவும் எச்சரிக்கையானேன். கடிதம்கூட அன்று வரைந்திருக்கலாம். ஆனால் நீ, 'தென்றலில் வளைந்துகொடுக்கும், வேலிக்குள் இருக்கும், சின்னஞ்சிறு செடி! ஆடுகளும், மாடுகளும் நாக்கை நீட்டி உண்ணக் காத்திருந்தன! என் கடிதம், அந்த வேலிக்கு விபத்தாகி, ஆடுமாடுகளுக்கு வழிசெய்துவிட்டால் என் செய்வது என்ற எண்ணத்தில், என் உணர்ச்சிகளை இதயத்திலேயே மோதவிட்டு, அதனால் தீராத வலிகண்டு துடித்தேன். நீ...? அந்த வினாக்குறிக்கு விடை திடீரெனக் கிடைத்தது! ஆம்! அந்த விடையும் உன் திருமண அழைப்பிதழாக என்னிடம் வந்தது. நான் முந்திக்கொள்ளுவதற்குமுன், உன் பெற்றோர்கள் உன் வாழ்க்கைப் பயணத்திற்குத் தனிப் பாதை அமைத்து கொடுத்துவிட்டார்கள். அப்போதும் உன்னை நான் வெறுக்கவுமில்லை; தவறு கூறவுமில்லை! உன்னை நானறிவேன்! ஆசையிருக்குமளவுக்குத் துணிவுஇல்லாதவள் நீ! அப்படியே நீ வீட்டில் உன் விருப்பத்தைக் கூறி இருந்தாலும் பெற்றோர்கள், உன் எண்ணத்திற்குச் சம்மதித்திருக்க மாட்டார்கள். குழந்தைகள், வேண்டாம் எனக் கூறும் பொருளை, வேண்டும் என அடம்பிடிக்கும்; ஆனால் பெரியவர்களோ, நம்போன்றவர்கள் வேண்டும் என்றால், அதையே வேண்டாம் என்று கூறி உறுதியாக நிற்பார்கள். இது மனித மனத்தில் ஒரு சார்பு. அஃதும், உலகத்தோடு பழகிய என் தமயனே, முதலில் என் எண்ணத்தை எதிர்த்தபோது, குறிப்பிட்ட எல்லைக்குள், சிலருடன் தவிர, மற்றவர்களுடன் பழகாத உன் பெற்றோர்

கள் எங்கே சம்மதிக்கப் போகிருர்கள்?

உண்மையிலேயே உன் திருமணத்திற்கு என்னை எதிர்பார்த்திருக்கமாட்டாய். ஆனுல், சோக கீத மிசைக்கும், 'இதயம்' எனும் இசைத் தட்டை வீட்டிலேயே வைத்துவிட்டு, வெறும் கூடாக, உணர்வு இல்லா நடைப்பிணமாக, உன்பால் நான்கொண்ட நல்லெண்ணத்தை எடுத்துக்காட்ட, வந்திருந்தேன்; என்னைப்பற்றி நானே புரிந்துகொள்ள, அது ஒரு சந்தர்ப்பமாகப் பயன்பட்டது. பரிசுகூடக் கொடுத்தேனே......மாங்காய் வடிவத்தில் வெள்ளிக் குங்குமச் சிமிழ், அதையாவது வைத்திருக்கிருயா? அதில், 'எங்கிருந்தாலும் வாழ்க!' எனும் வரியையும், என் கையொப்பத்தையும் பொறித்திருந்தேனே! அதனுல் தானே என்னவோ இன்று நீ,அந்தச் சிமிழை உபயோகிக்க முடியாத நிலை பெற்ருயோ!

இரண்டு நாட்களுக்குமுன், இவ்வூர்ப்பள்ளியில் நீ நுழைவதைக்கண்டேன். ஆனுல், நீ என்னைக் காணவில்லை. ஏன் பார்த்தோம்?' என்ற எண்ணம்தான் என் மனதில் மேலோங்கி நின்றது! இளமையான உன் முகத்தில் சோகத் திரை! பூவில்லை, பொட்டில்லை. பொங்கும் இளமைக்குப் பொலிவில்லை. வெடித்துவிட்ட பலூனுகியது என் இதயம்! ஓலமிடும் இதயத்திற்கு ஓய்வில்லை! அணை உடைந்த கண்ணீருக்கு அளவில்லை! என் வாழ்வுதான் பட்டமரமாகியது என எண்ணினேன்! ஆனுல், உன் வாழ்க்கையும், உடைந்த சிற்பமாக—கலைந்த ஓவியமாகியது என எண்ணும்போது, உண்மையிலேயே என்னுல் தாங்க முடியவில்லை! நீ, மேகம் மறைத்த நிலவாக—கைம்பெண்ணுக வாழ்வதைக் காணுவதைக் காட்டிலும், நான் இவ் உலகினின்றும் மறைந்து விடுவதை மகிழ்சியாக எண்ணுகிறேன். ஆகவே, எனது ஒரே ஒரு ஆசையையாவது நிறைவேற்று! உன் வாழ்க்கை ஓவியத்தை வேறு ஓவியனைக் கொண்டு, அழகுப் படுத்திக் கொள்! என்னைத் தவருக எண்ணுதே! அந்த மற்றுமொரு ஓவியனுக நானே இருக்கவேண்டுமென்று கூறவில்லை! வேறு யாரையாவது மணந்துகொள்! எப்படியோ மறுவாழ்வு பெற்றுப், பழைய பூங்கோதையாகப் பூவோடும் மஞ்சளோடும் வாழ்வதையே விரும்பும்

உன் நலத்தில் நாட்டம் கொண்ட

கனகு

பண்புடையீர்!

தங்கள் கடிதம் கண்டேன்.அந்தக் கடிதம், பல ஆண்டுகளுக்கு முன் பார்த்த திரைப்படத்தின் காட்சிகள், அங்கொன்றும், இங்கொன்றுமாக நினைவு வருவதுபோல், சிதறிக் காட்சி அளிக்கின்றன. 'நடந்ததை மறந்துவிடு; நல்லதை எண்ணு' என்று என் மணநாளில் நீங்கள் கூறியதை என்றும் மறக்கவில்லை. இனியும் மறக்கமாட்டேன். ஆனுல், உங்கள் கோரிக்கையை, அப்படியே நிறைவேற்ற முடியாமைக்காக வருந்துகிறேன். 'வாழ்க்கையில் ஒவ்வொருவரும்,ஏதாவது ஒன்றிற்கு ஆசைப்படுகிருர்கள். ஆனுல், அந்த ஆசை நிறைவேறிவிட்டால், வாழ்க்கை வசந்தகாலமாகிறது! இல்லையெனில் வெயில் காலத்தில், பாலைவனத்தில் வாழ்வதைப்போல், தீயிட்டுப் பொசுக்குகிறது. உடல் மறைந்தாலுப் கவலையில்லை!

நம்மை வழிநடத்தும் உள்ளமல்லவா, வேதனைத் தீயில் வெந்து, சித்திரவதை செய்கிறது! என்னை விரும்பினீர்கள்... கிடைக்கவில்லை! வாழ்க்கையை விரக்தியுடன் கழிக்கிறீர்கள்! நீங்கள் மட்டும், ஏன் வாழ்க்கையை வகைபடுத்திக்கொள்ளக் கூடாது? ஊருக்கு உபதேசம் செய்பவர்கள் முதலில் அவர்கள்உள்ளத்தைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும். வாழ்க்கையின் வசந்தகாலம் என்றுகூறப்படும்நாளைநழுவவிட்டுப், பயனற்றவாழ்க்கைவாழும் உங்களை எண்ணுத நாளில்லை! என்னுடைய வருத்தமெலாம், என்னுல் உங்கள் வாழ்வு கெட்டதே என்பதால்தானே தவிர, வேறு எதற்காகவுமில்லை. அன்று உங்களை விரும்பினேன், பணம் கொடுத்துப் படம் பார்த்த கதையாகியது அது! அத்துடன் என் எண்ணம் மறைந்தது. மணம் புரிந்துகொண்டேன், வாழ்ந்தவரை மகிழ்ச்சியாக வாழ்ந்தேன். பிரிந்தார் என்னையும் இவ்வுலகத்தையும்விட்டு! பொருளீட்டுகிறேன். வாழ்க்கைக் கணக்கை கூட்டிக்கொண்டேபோகிறேன். இறுதி முடிவு...... இலாப நட்டமில்லாக் கணக்காகப் போகிறது! மழலை இல்லாக் குறையை பள்ளிச் சிறுவர்கள் மூலம் நிறைசெய்து கொள்ளுகிறேன். பெண்ணுக்கு பூவும், மஞ்சளும் தேவை தான்... அழகுதான்! ஆனுல், உதிர்ந்துவிட்ட இதழை ஒட்டவைக்க முடியுமா? ஆளுக்கொரு நீதி ஏன்? சுயநலம்தான் காரணம். நாம் விரும்பியவர் நன்ருக வாழவேண்டும் என்ற எண்ணம்! நீங்கள்மட்டுமன்று, கூலி வேலை செய்பவன் முதல், நாட்டை ஆளும் அமைச்சர்கள் வரை, சுயநலத்துடன்தான் வாழ்கிருர்கள்! உலகில் எங்குநோக்கினும், சுயநலமேயன்றிக், கிஞ்சிற்றேனும் 'பொதுநலம்' காணப்படவில்லை!

நம் மனைவி மக்கள் சுகமாக வாழ வேண்டும் என்று, கூலி வேலை செய்பவன் நினைக்கிருன். நம்நாட்டு மக்கள் நன்குவாழவேண்டும் என்று நாட்டையாள்பவர்கள் நினைக்கிருர்கள்...? நான் வாழவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்! இதில், எங்கு பொதுநலம் இருக்கிறது? இவ்வளவு கூறும் நானும், சுயநலத்துடன்தான் தங்களுக்கு ஒருவேண்டுகோள்விடப் போகிறேன்... நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன், நிறைவேற்றுங்கள் என்ற அன்புக் கட்டளையுடன், ஏழை பள்ளி ஆசிரியை என்ற ஒரே காரணத்திற்காக, இளம் வயதில் விதவையாகிவிட்டேன் என்ற இயற்கையின் குற்றத்திற்காக, மணமாகாமல் கன்னியாகவே வாழும் என் ஒரே தங்கைக்கு வாழ்வுகொடுங்கள்!

என் தங்கையின் வாழ்வுப் புத்தகத்திற்கு நீங்கள்தான் முன்னுரை எழுதத் தகுதியுள்ளவர். ஏனெனில், எதிர்காலத்தில், சிறந்த வரவேற்புப் பெறவேண்டிய புத்தகம் அவள் வாழ்வு! ஆனுல் நான்...? இரண்டாம் முறையாக படிக்கப்போகும் புத்தகம்! முதலிலிருந்த விறுவிறுப்பு இருக்காது! கலைந்த இந்த ஓவியத்தை கலைக்காக உழைக்காமல், காணிக்கைக்காக உழைக்கும், ஏதாவது ஒரு ஓவியனைக்கொண்டு சீர்செய்துகொள்ளலாம். கலைந்தது என்ற சொல் போய், ஓவியம் என்ற சொல் மிஞ்சினுல் போதும்! ஆனுல் அவள் வாழ்வு, கலையின் இருப்பிடம், அழகின் பிறப்பிடம் என்று கூறுமளவுக்குஅமையவேண்டியவாழ்க்கை ஓவியம்! ஆகவேதான் உங்களிடம் அப்பொறுப்பை ஒப்படைக்க விரும்புகிறேன்.

நான் உலகின் கண்களுக்கு, ஒழுக்கமுள்ளவளாக, பழியற்றவளாக வாழ, யாராவது, என்னைப் போல் துணையிழந்த, பரிதாபத்திற்குரியவர் ஒருவரைமணந்துகொள்ளுகிறேன். நான் இவ்வூருக்கு என் தங்கையுடன் வந்தபுதிதில், இவ்வூர்ப் பள்ளியில் என்னுடன் பணிபுரியும், ஆசிரியர் மணிவண்ணன், எங்களுக்கு எவ்வளவோ உதவி செய்துள்ளார். ஆனுல், அவர் வாழ்வு மிகவும்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

வருந்தத்தக்கதொன்றாக உள்ளது! மணம் புரிந்த பத்தாவது மாதம், பாம்பு கடித்து அவர் மனைவி மறைந்துவிட்டாள். அது முதல் வாழ்க்கையை விரக்தியுடன் கழிக்கிறார். ஆகவே துணையிழந்து, தனிமைத் துன்பத்தில் வாடும் அந்நல்லவருக்கு அமைதியளிக்க விழைகிறேன். இனி எனக்காக என்ற ஒரு வாழ்வுமில்லை! மற்றவருக்காகத் தான் வாழப்போகிறேன். அந்த முடிவு, தங்கள் விருப்பத்தையும் ஓரளவு பூர்த்தி செய்ததாகவும் இருக்கும்; துணையிழந்த அந்த ஆசிரியர் பெருந்தகைக்கு அமைதி அளிப்பதாகவும் இருக்கும், என் எதிர்காலத்திற்கும் ஒரு வேலியாகவும், மதிப்பாகவும்இருக்கும்! கிழிந்த துணியை ஒட்டுப்போட நினைக்கிறேன். புதிய துணியின் பொலிவு மிளிராவிட்டாலும், ஓரளவு அமைதி, துளை விழுந்த துணியல்ல என்று கூறிக்கொள்ளுவதில்! அவ்வளவே! நீங்கள் இந்த உதவியாவது செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் எழும் இறுதி முடிவு, உங்கள் வாழ்க்கையின் கணக்கையும் இலாப நட்டமில்லாக் கணக்காக ஆக்கிவிட்ட அமைதி ஒன்று தான்!

தங்கள் முடிவில் நம்பிக்கையுள்ள...

பூங்கோதை

மணிநா ஆர்த்த மாண்புடைத் தேரன்

—[நா. நாராயணன்]—

முல்லை மலர்கள் தங்கள் கூரிய நுனிகளை விரித்து மணம் பரப்புகின்றன.

கொன்றையின் முகைகள் மெல்லிய கட்டு நெகிழ்ந்து விரிகின்றன.

இரும்பை முறுக்கியதுபோலும் உறுதிகொண்ட கரியபெரிய கொம்புகளையுடைய மான்கள் துள்ளிக் குதித்து ஆடுகின்றன.

ஆம்! இது கார்ப் பருவம்!

நீண்ட பெரிய மலைகளையுடைய குறும்பொறை நாடன் அவன்; காதலியோ போதுவிரிந்த காந்தளெனச் சிறந்த அழகினள்.

கார்ப்பருவம் காதலியை நினையூட்ட, புரவிமீதேறி விரைந்து வருகிறான் அவன். காடு மலைகளைக் கடந்து தாவி ஓடுகிறது அந்த உயர்ந்தப் புரவி. காதலின் கனவு மயக்கத்திலே இருக்கும் அவனுக்கு, அவன் உள்ளத்துக்கு இன்னும் இன்னும் வேகமாகச் செல்லவேண்டும் என்ற எண்ணம்.

இடையிலே ஒரு காதற்காட்சி.

பூ நாறும் நற்சோலை அது.

'குழலும் யாழும்தான் இனிதென எண்ணுதீர்.

எங்கள் குரலும் இனிது, என்பது போல இசைபாடும் தேன் தும்பி ஒன்று தன் காதற் பெடையோடு கள்ளுண்ட மயக்கத்திலே திளைத்திருக்கிறது. சுற்றி நடக்கின்ற செயல்களை அவைகளின் கண்களுக்குப் புலப்படவில்லை. ஒரே இன்பக் கிறக்கம்.

இந்தவண்டுகளின் அருமையான காதற்காட்சி நம் தலைவனின் கண்களுக்குத் தென்படுகிறது. என்ன செய்வான்?

ஒருபுறம் காதலியை விரைவில் காணவேண்டும் என்ற ஏக்கமும் பரபரப்பும்; மற்றொருபுறம் விரைந்து செல்லும் புரவியின் ஆட்டத்தால் ஓசை எழுப்பும் மணி ஒலிகேட்டு இன்பம் துய்க்கும அவ்விசைத் தும்பிகள் அச்சத்தால் மயங்கி, தங்கள் செயல்விடுத்துப் பறந்து விடுமோ என்ற அச்சம்.

என்ன இருந்தாலும் சுயநலம் பேணுத் தமிழ் மகனல்லவா அவன்? மணிகளின் நாவை ஒலியாமற்கட்டி மிகவும் மெதுவாக ஓட்டிச்செல்லுகிறான் தேரினை.

தேனுண்ட தும்பிகள், "இன்பம் உண்டு; அதை அனுபவிக்கத் தாம் உண்டு" என்று மயங்கிக் கிடக்கின்றன.

ஒரு காதல் ஜோடியின் களவு விளையாட்டிலேதான் குறுக்கிடவில்லை என்ற பெருமிதத்துடன், அவற்றின் இன்ப வேதனைக்குத் தான் இடையூறு செய்யவில்லை என்ற மகிழ்வுடன், இன்பத்தின் எல்லையைக் காணத் துடிக்கும் அத் தும்பிகளுக்கு இன்னும் உதவி செய்தோம் என்ற மனநிறைவுடன் தேரினை ஓட்டி வருகிறான் நம் தலைவன்.

அங்கு தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும தலைவியை அணைத்து மகிழ்கிறான்.

சாதாரண இசைத் தும்பியின் வாழ்விலும்கூட இன்பத்தையே தேடும் அவன், தன் ஊனின் ஊனாய், உயிரின் உயிராய் நிற்கும் தலைவியிடத்து எவ்வளவு அன்பும், அவளுக்கு இன்பமளிப்பதில் எத்துணை ஆவலும் கொண்டிருப்பான் என்பதைக் கவிஞர் நமது கற்பனைக்கே விட்டு விடுகிறார்.

முல்லை வைந் நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார் செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய் சுவல் புரவி
நரம் பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக் காண் தோன்றும் குறும்பொறை
நாடன்
கறங்கிசை விடிவின் உறந்தைக் குணது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை நின் மாணலம்
படர்ந்தே

---குறுங்குடி மருதனார்
அகநானூறு பாடல் 4. ★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.